# கார்த்திகை மஹாத்மியம்

ஸ்ரீவத்ஸ. வெ. ஸோமதேவ சர்மா



பவானி புக் சென்டர்

# கார்த்திகை மாஹாத்ம்யம்

ஆசிரியர்:

ஸ்ரீவத்ஸ, வெ. ஸோமதேவ சர்மா


பவானி புக் செண்டர்

19, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம்

சென்னை-600 033

1984

★


# கார்த்திகை மாஹாத்ம்யம்

| | |
|---|---|
| ஆசிரியர் | ஸ்ரீவத்ஸ, வெ. ஸோமதேவ சர்மா |
| பதிப்பு | நவம்பர் 1984 |
| பதிப்புரிமை | பதிப்பகத்தார் |
| வெளியீடு | பவானி புக் சென்டர்<br>19 ஸ்டேஷன் ரோடு<br>மேற்கு மாம்பலம் சென்னை-600 033 |
| அச்சு | ஸ்ரீ சுரபி பிரிண்டர்ஸ்<br>158 12 ஏரிக்கரைத் தெரு<br>மேற்கு மாம்பலம், சென்னை-600 033 |

விலை: ரூ. 4-00

# பதிப்புரை

ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராச்சார்யர் அவர்களின் நல்லாசியுடனும், ஆஸ்திக அன்பர்களின் வேண்டுகோளுக்கும் ஆதரவுக்குமிணங்கவும் பல்வேறு ஆன்மீக நூல்களை நாங்கள் வெளியிட்டு வருவது எல்லோரும் அறிந்ததே.

எமது ஆன்மீக நூல் வரிசையில் பிரதானம் பெறுபவை ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா அவர்களின் நூல்கள். ஆஸ்திக அன்பர்களுக்கு அருமருந்தாய் விளங்கி அவர்களுக்கு நற்பேறு அளிக்கும் ஸ்ரீ ஸோமதேவ சர்மா அவர்களின் 'கார்த்திகை மாஹாத்ம்யம்' என்னும் கார்த்திகை மாதத்தின் பெருமைகளை விளக்கும் இந்த நூலைத் தற்போது ஆஸ்திக அன்பர்களுக்கு வழங்குவதில் பெருமை கொள்கிறோம்.

மாமுனிவர் வஸிஷ்டர் ஜனக மஹாராஜனின் வேண்டுகோளுக்கிணங்க உபதேசித்த கார்த்திகை மாதத்தின் பெருமைகள், இந்நூலில் 32 தலைப்புகளில் சிறுசிறு கதைகளுடன் கூடிய உபதேசங்களாக விரிகின்றன.

ஸோம வார பூஜை, ஸ்வதந்தர நிஷ்டுரை கதை, பிசாசப் பிறவி நீங்கிய கதை, தீப தான பலனை விளக்கும் கதை முதல் கார்த்திகை புராண மஹிமை ஈருக ஒவ்வொரு தலைப்பும் ஒரு கதையின் மூலம் கார்த்திகை மாதத்தில் செய்யவேண்டிய கர்மாக்கள், அனுஷ்டிக்க வேண்டிய விரதங்கள், அதனால் விளையும் பலன்களைச் சுவையாகச் சொல்கின்றன.

வளமான பொக்கிஷம் போன்று அன்பர்களின் வாழ்வுக்கு வளமூட்டி நற்கதியடைய வழிகாட்டும் இந்த அரிய நூலை, அனைவரும் பின்பற்றுவதையே நாங்கள் பிரதிபலனாகக் கருதுகிறோம்.

தங்களன்புள்ள,

**பதிப்பகத்தார்**

# பொருளடக்கம்


1 வஸிஷ்டர் ஜநகருக்கு உபதேசித்தது
2 ஸோமவார பூஜை முற்பிறவியை நினைவூட்டும்
3 ஸ்வதந்தர நிஷ்டுரை கதை
4 கார்த்திகை விரதம் பிஶாசப் பிறவியைப் போக்கும்
5 தீப தான பலன் ... ...
6 மாஹாத்ம்ய ஶ்ரவண பலன்
7 கார்த்திகை ஸ்நான தான ஶ்ரவண மஹிமை
8 பிராயச்சித்தமில்லாமல் பாபமகலுமா?
9 மஹா பாபிக்கும் நாம நற்கதி தந்தது
10 யமதூத ஹரிதூத ஸம்வாதம்
11 அஜாமிளனது முற்பிறவி
12 புராணம் நடத்தினவர்க்கே நற்கதி
13 கார்த்திகை தர்மமும், வைஶ்ய சரிதமும்
14 வங்கராஜனும் கன்யாதான மஹிமையும்
15 விருஷோத்ஸர்க்க பலன்
16 ஷோடஶ உபசார பூஜை
17 எலிக்கும் நற்கதி
18 தீபத்தை நொந்திய பலன்
19 ஸ்தம்பதீப பலன்
20 தத்வோபதேசம்
21 சாதுர்மாஸ்யமென்பதென்ன?
22 ரிஷிகள் கூறிய ஸ்துதி
23 புரஞ்ஜயன் சரிதம்
24 புரஞ்ஜயன் தோல்வி
25 புரஞ்ஜயன் வெற்றி
26 ஸ்ரீரங்க ஸேவை, புரஞ்ஜயன் முக்தி
27 அம்பரீஷ சரிதம்
28 விஷ்ணுவின் உபதேசம்
29 அம்பரீஷனது வருத்தம்
30 ஸுதர்ஶந அம்பரீஷ ஸம்வாதம்
31 முனிவர் பாரணை
32 கார்த்திகை புராண மஹிமை

# கார்த்திகை மாஹாத்ம்யம்

[இது ஸ்காந்த புராணத்தில் முப்பது அத்யாய வடிவமாக அமைந்துள்ளது. ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு வகையான விசேஷமுள்ளது. வைசாகம், துலா, கார்த்திகை, மாகம் என்ற நான்கும், ஸ்நாநம், தாநம், ஜபம், பாராயணம் முதலியவை களுக்கு மிக விசேஷமானவை.]

## வஸிஷ்டர் ஜநகருக்கு உபதேசித்தது

வழக்கப்படி நைமிசாரண்ய வாஸிகள் கேட்க, ஸூத புராணிகர் கூறுகிறார். இது ஆதியில் பார்வதிக்குப் பரமசிவனும், மகாவிஷ்ணு ரமாதேவிக்கும், பிரும்மா நாரதருக்கும் கூறியது. ஸம்ஸார பந்தத்தை அகற்ற வல்லது. ஒரு ஸமயம் வஸிஷ்டர் ஜநக மஹாராஜனது அரண்மனைக்கு வந்தார். க்ஞாநியான ஜநகன் அர்க்யம் பாத்யம் ஆசமநம் முதலிய உபசாரங்களைச் செய்து, ஆஸநமளித்து, ஸ்வாகதம் கூறினான். வஸிஷ்டரும் மன்னனை வாழ்த்தி க்ஷேமம் விசாரித்தார். ஜநகன், பக்தி பரவசனாகி முநிவரைப் போற்றிப் புகழ்ந்து கொண்டாடினான். அடியேனை நாடி வந்த காரணம் யாதோ? ஸாதுக்களைத் தர்சிப்பதும், பூஜிப்பதும், அவர்களிஷ்டத்தைப் பூர்த்தி செய்வதும் ஒன்றைவிட ஒன்று மேலான பலனைத் தரும். ஆதலின் யான் என்ன செய்யட்டும் தங்களுக்கு? —என்றான்.

ஜநக! குலத்திற்கேற்றபடி தர்மசிந்தையும், பெரியோரிடம் அன்பும் கொண்டிருக்கிறாய். நான் ஒரு யாகம் செய்யப் போகிறேன். அதற்கு வேண்டிய தக்ஷிணை தந்தால் போதும் என்றார் வஸிஷ்டர். மஹர்ஷே! கேட்பவர் உத்தம பாத்ரம்! கார்யமோ மிக ச்ரேஷ்டமானது! எவ்

வளவு அபேக்ஷையோ அவ்வளவையும் எடுத்துக் கொள்ளுங்கள். தநந் தேடுவது தர்மத்திற்காகத்தானே!

தாங்கள் ஸகல தர்மங்களையும் அறிந்தவர். பிரும்ம புத்ரர். தங்களிடமிருந்து தர்மத்தைக் கேட்க விரும்புகிறேன். மாதங்களில் கார்த்திகை மிகச் சிறந்தது! அச்சமயம் அனுஷ்டிக்கும் தர்மம் அழிவில்லாப் பயனைத் தருமெனக் கேட்டிருக்கிறேன். அந்த விசேஷத்தைக் கூறுங்கள் என்று பிரார்த்தித்தான்.

வஸிஷ்டர் கூறுகிறார்: மஹாராஜ! லோக க்ஷேமத்தைத் தரக்கூடிய கேள்வி இது. பூர்வ ஜன்ம புண்யத்தால்தான் மநஶ்ஶுத்தி தோன்றும். சுத்த மனமுள்ளவரே இத்தகைய கேள்விகளைக் கேட்பர். ஸூர்யன் துலா ராசியில் புகுந்தவுடன் (இது ஸௌரமானக் கணக்கு) கார்த்திகை மாதத்தில் பிராத: ஸ்நாநம் தாநம் பித்ரு ஶ்ராத்தம் தேவபூஜை முதலியவைகளை ஶ்ரத்தையுடன் செய்தால் அக்ஷய்ய பலனைத் தரும். கார்த்திகை முதல் நாளிலிருந்து முப்பது நாட்களோ அல்லது பிரதமை முதலோ கார்த்திகை விரதமாரம்பிக்க வேண்டும். இது ஸூர்ய உதய காலத்தில் செய்ய வேண்டியது. காவேரியில் கார்த்திகை ஸ்நாநம் செய்வது விஶேஷம். கார்த்திகை பிறந்தவுடன் ஹ்ருஷீகேஶன் தனது உடலை ஜலமாக்கிக் கொண்டு, கிணறு, குளம், ஏரி, மடுவு, நதி, பசுவின் குளம்பு நனையும் ஜலமாயினும் அங்கெல்லாம் வந்து தங்குகிறார். அவரவர் வர்ணாச்ரமாசார நியமத்துடன் பகவானை நினைத்து, கங்கையை நமஸ்கரித்து, கை கால்களை அலம்பி, ஶுசியாய் ஸங்கல்பம் செய்து கொள்ளவேண்டும். இடுப்பளவு நீரில் நின்று முழுகி, (புருஷர்) தேவ ரிஷி பித்ரு தர்ப்பணம் செய்யவேண்டும். அகமர்ஷண மந்த்ரங்களை ஜபிக்க வேண்டும். எல்லோரும் ஜலத்தைக் கையால் எடுத்து வந்து, கரையில் யக்ஷ்ம தர்ப்பணம் செய்யவேண்டும். ஶிகோதகம், வஸ்த்ர ஜலம் அளித்து, உலர்ந்த வஸ்த்ரத்தால் தலையைத் துவட்டிக்கொள்ள வேண்டும். பிறகு

யமடி வஸ்த்ரமுடுத்தி, புண்ட்ரமணிந்து, ஸந்த்யை செய்து, கிருஹஸ்தன் ஔபாஸந ஹோமம் செய்ய வேண்டும். பிரும்ம யக்ஞம் தேவபூஜை முதலியவைகளை ஒழுங்காக அனுஷ்டிக்க வேண்டும்.

ஶங்க சக்ரதாரியாக பகவானை த்யாநம் செய்து ஸாளக்ராமத்தில் பதினாறு உபசாரங்களுடன் பூஜை செய்து, புராண படநம் (படிப்பது) ஶ்ரவணமிவைகளைச் செய்து, மாத்யான்னிகம் வைஶ்வதேவம், அதிதி பூஜை, போஜநம் இவைகளை முடிக்க வேண்டும். புஜித்த பின்பும் அவகாஶமுள்ளவர் புராணங் கேட்டு, மாலை ஸந்த்யா வந்தந ஔபாஸனமானபின் சிவ, அல்லது விஷ்ணு ஆலயம் செல்ல வேண்டும். ஶக்திக்கேற்ற வண்ணம் தீபங்களை ஏற்றவேண்டும். மௌநமாக இருந்து விதிப் படி ஆலய ஸேவை, ஜபம், த்யாநம், நமஸ்காரம் முதலியன செய்பவர் இந்தக் கார்த்திகை விரத புண்யத்தால் பூமியில் திரும்பப் பிறவாமல் வைகுண்டத்தில் வஸிப்பர். முற்பிறவியில் செய்ததும், இப்பிறவியில் செய்ததுமான ஸகல பாபங்களையும் அகற்றவல்லது கார்த்திகை வ்ரதம். பிராம்மணர், க்ஷத்ரியர், வைஶ்யர், நான்காம் வர்ணத்தவர், ஸ்திரீ ஆகிய அனைவருமிதைச் செய்து, மறுபிறவி இல்லாமல் வைகுண்டத்திலேயே வஸிக்கலாம்.

இந்தக் கார்த்திகை விரதத்தை ஒழுங்காகச் செய்யும் ஒருவரைப் பார்த்து, நம்மால் முடியவில்லையே! இவரேனும் செய்கிறாரே! என ஸந்தோஷித்தால் போதும்! அன்று செய்த பாபமகலும்.

2-வது அத்தியாயம்

## ஸோமவார பூஜை முற்பிறவி நினைவூட்டும்

மஹாராஜ! கார்த்திகை மாதமே விஶேஷ புண்யம் அளிக்கும். அதிலும், அதில் வரும் நான்கு ஸோமவாரங்களும் மிகமிகச் சிறந்த பலனைத் தரவல்லவை! அன்று

அநுஷ்டிக்கும் ஸ்நாந தாந பூஜா ஜபம் முதலியன ஆயிரம் அச்வமேத பலனைத் தரும். உபவாஸம், ஒருவேளை பகல் மாத்ரம் உணவு, இரவில் உபவாஸம், பகல் உபவாஸம், இரவு உணவு, தானே கிடைத்ததை மாத்ரம் உண்பது, முறைப்படி காலை ஸ்நாநம் செய்வது, திலதாநம் செய்வது என்ற ஆறுவகையாகக் கார்த்திகை விரதம் அநுஷ்டிக்கலாம். பசி பொறுப்பவர் ஸோமவாரத்தன்று பூர்ணோபவாஸமிருந்து பகவானைப் பூஜிக்கலாம். ஒருநாள் பூர்ணமாக உபவாஸம் இருக்க முடியாதவர், ஏகபக்தம் அதாவது ஒருவேளை உபவாஸமிருந்து மற்றோர் வேளை உண்ணலாம். அதற்கும் முடியாதவர் பிராம்மணர்களுக்கு அன்னமிட்டு, அவர்கள் உத்தரவு பெற்றுப் புஜிக்கலாம். ஆலயத்தில் தீபமேற்றுவது, திலதாநம் செய்வது இவைகளில் ஒன்றையேனும் கார்த்திகையில் அநுஷ்டிக்காதவர் கும்பீபாகம் முதலிய நரகத்தில் வீழ்வர்.

கார்த்திகை ஸோமவாரத்தன்று பகலில் உபவாஸமிருந்து, பூஜை செய்து, இரவில் ஆஹாரம் ஏற்கும் விதவா ஸ்திரீ, புருஷன் ஆகியவர்களின் பாபம் தீயிலிட்ட பஞ்சுபோலாகும். சிவாபிஷேகம் அர்ச்சனை செய்வோர் தான் பாபத்திலிருந்து விடுபடுவதுடன் மற்ற முன்னோர்களையும் விடுவிக்கிறார்.

## ஸ்வதந்தர நிஷ்டுரை கதை

காச்மீர தேசத்தில் ஒரு வைதிகருக்கு அருமையாக பெண் குழந்தை பிறக்க அதை மிக்க அன்புடன் ரக்ஷித்து வளர்த்தார். வயது வந்ததும் அவளை அடக்கி ஒடுக்கி நற்குணம் கற்பிக்காமல் அவளிஷ்டப்படி விட்டுவிட்டார். மிக அழகு வாய்ந்த அந்தக் கன்யகை பெற்றோரையும் மற்றோரையும் கடுமையாகப் பேசுவாள். விவாஹமானால் அவள் திருந்தலாமெனத் தந்தை ஸௌராஷ்ட்ர தேசத்தைச்சார்ந்த மித்ரசர்மா என்ற பிராம்மணோத்தமருக்குக் கன்யாதாநம் செய்தார். மிகச் சிறந்த தர்மசீலரான

அவர் ஸதா வேதமோதுவார். வேதோக்த கர்மாக்களைச் செய்வார். தீர்த்த யாத்ரை செல்வார். இதெல்லாம் அவளுக்குப் பிடிக்காது. ஆட்டம் பாட்டு அலங்காரம் இவைகளில் பதியை இழுத்துத் தன் வழிக்குத் திருத்த முயன்றாள். அவர் தயாளுவானதால் அன்புடன் தர்மங்களைக் கூறி, அவளை நல்வழிப்படுத்த முயன்றார்.

அதற்குச் செவிசாய்க்காததுடன், பதியைக் கடுமையாகப் பேசி ஏசி, முடிவில் அடிக்கவும் ஆரம்பித்தாள். அவளது பெற்றோரும் பந்துக்களும் அவளை த்யாகம் செய்து விட்டாலும், க்ருஹஸ்தாஶ்ரமத்திற்கு மனைவியே முக்யம். அன்றியும் குடும்பச் சண்டையை வெளியிட்லாகாது. எனவும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார் மித்ரஶர்மா. யௌவநம் அழகு இந்த கர்வத்துடன் பர புருஷர்களுடனும் சேர ஆரம்பித்தாள். அவர்கள் அளிக்கும் ஆபரணங்களை அணிந்து, ஆடம்பரமாகத் தெருவில் திரிவாள். ஒருநாள் பாபிகளுடன் சேர்ந்து பதியைக் கொல்லத் திட்டமிட்டாள். அவரிடம் அளவளாவிப் பேசி பதியுடன் படுத்திருந்தாள். ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்தபடி கள்ளப் புருஷன் பெருங் கல்லைத் தூக்கி அவர் தலையில் போட்டு அவரைக் கொன்றான். அவளும் பர புருஷனும் சேர்ந்து அவர் உடலைப் பாழுங் கிணற்றில் தள்ளிக் கிணற்றை மூடினார்கள். கேட்பாரின்றி தன்னிஷ்டப்படி காமுகர்களுடன் கூடிக் காமஸுகத்தையே பெரியதாகக் கருதினாள். பக்தியோ கதா ஶ்ரவணமோ நல்ல ஸஹவாஸமோ கிடையாது. ஓடுகிற ஜலம் ஓடிக்கொண்டே இருக்குமா? வயது முதிர்ந்தது! அங்கம் தளர்ந்தது! அழகு குறைந்தது! நோய் சூழ்ந்தது. விரணங்கள் தோன்றின. துர்நாற்றமெடுத்தது. யாரிவளைச் சீந்துவர்? மிகக் கொடிய பாபத்தைச் செய்தவர், இப்பிறவியிலேயே மூன்றாண்டிலோ, மூன்று மாதத்திலோ, மூன்று நாட்களிலோ பலனை அனுபவிப்பர் என்பர்.

மூன்றாண்டுக்குள் இவள் பல துன்பங்களை அனுபவித்து முடிவில் உயிரையும் இழந்தாள். யமதூதர் அவளைப்

பலவகையாக ஶிக்ஷித்துப் பல நரகங்களில் தள்ளினுர்கள். பழுக்கக் காய்ச்சிய இரும்புத் தூணைக் கட்டிக்கொள்ளும்படி அடித்தனர். கும்பீபாகம் முதலிய நரகங்களில் தள்ளிச் சிலையாலடித்தார்கள். காதில் அரக்கைக் காய்ச்சி விட்டனர். இவள் செய்த பாபத்திற்காக இவர்களது பத்து தலைமுறை முன்னோர்களுடன் நரக யாதனை அனுபவிக்கச் செய்தனர். பிறகு பதினைந்து முறை புழுத்த பெண் நாயாக பூமியில் பிறக்கச் செய்தனர். ஒரு நாள் வீடு வீடாகத் திரியும் பொழுது தற்செயலாக ஒரு பிராம்மணன் வீட்டில் இரவில் சென்றது அந்தப் புழுத்த நாய்.

அந்த வீட்டுக்காரர் அன்று கார்த்திகை ஸோமவார பூஜைசெய்து நிவேதனம் செய்தபின் வாசலில் பலியைக் கொண்டு வைத்துக் கால் அலம்பினுர். அந்தப் பலியைச் சாப்பிட்டபின் அந்த நாய்க்கு பூர்வஜன்ம க்ஞானம் உண்டாகி அவரிடம் பேசவும் ஆரம்பித்தது. அந்த ஆச்சர்யத்தைக் கண்ட பிராம்மணன் இது என்ன விந்தை! நீ யார்? ஏன் இந்த ஜன்மமெடுத்தாய்? உனக்கு எப்படி பூர்வ ஜன்ம ஞாபகம் ஏற்பட்டது? என்று வினவினுர். ஜாதியைக் கெடுத்தவளும் குலத்தைக் கெடுத்தவளும் பதியைக் கொன்றவளுமான அந்தப் பாபி பேச ஆரம்பித்து தனது பாபங்களையும் நரக யாதனைகளையும் கூறி தனக்கு இன்று இங்கு பூர்வக்ஞாநம் உண்டான காரணம் தெரியவில்லை. நீர்தான் கூற வேண்டும் என்றது.

இதைக் கேட்ட பிராம்மணன் இன்று நீ ஸோமவார பூஜாபலியைச் சாப்பிட்டதால் உனக்குப் பூர்வக்ஞானம் ஏற்பட்டதென்ருர். இதைக் கேட்ட பெண் நாய் ப்ரபோ நீர்தான் என்னைக் காத்தருள வேண்டுமெனக் கதறிற்று. கருணை நிறைந்த பிராம்மணன், இன்று அநுஷ்டித்த கார்த்திகை ஸோமவார பூஜா புண்ணியத்தை உனக்கு அளிக்கிறேன் என அதைத் தானம் செய்தார். உடனே அந்த நாய் கீழே விழ அதிலிருந்து அப்ஸரஸ் போன்ற அழகிய திவ்ய ஶரீரம் ஒன்று கிளம்பிற்று. உடனே

ஒரு திவ்ய விமானம் வர ஶிவ கிங்கரர் அவளை நன்கு பூஜித்து அவளது பதியுடனும் பந்துக்களுடனும் கைலாஸத்திற்கு அழைத்துச் சென்றனர்.

இன்றும் அவர்களங்கே வஸிக்கின்றனர் என்றால், கார்த்திகை ஸோமவாரத்தின் மஹிமையைக் கூறவும் வேண்டுமா? எத்தகைய பாபத்தையும் போக்கும் இந்த விரதத்தை நீயும் அனுஷ்டானம் செய் என்றார் வஸிஷ்டர் ஜநகனை நோக்கி.

### 3-வது அத்தியாயம்

## கார்த்திகை விரதம் பிஶாச பிறவியைப் போக்கும்

ஸ்வல்ப புண்யத்தால் அக்ஷய்ய பலனைத் தரும் கார்த்திகை விரதத்தை, நிலையில்லா மாநுஷ உடலைத் தரித்தோர் செய்து சிறந்த பலனைப் பெறாவிடில் பல பிறவிகளில் நாய் முதலிய உடலைப் பெறுவர். கார்த்திகை பௌர்ணமியில் ஸ்நாந தாநாதிகளைச் செய்யாதவர் பஞ்சமனாகப் பல பிறவிபெற்று பிரும்மரக்ஷஸ்ஸாவர்.

ஆந்த்ர தேசத்திலே தத்வநிஷ்டர் என ஒரு வேதியரிருந்தார். அவர் மிக்க ஆசார சீலர். ஶாஸ்த்ரமறிந்தவர். சத்யவாதி. ஒரு ஸமயம் தீர்த்தயாத்ரையாகக் கிளம்பி கோதாவரி தீரம் சென்றார். அங்கு ஸ்நான தானம் முதலியவைகளை முடித்து ஓர் ஆலமரத்தின் அடியில் தங்கினார். அதில் மேலே நோக்கிய மயிரும் பயங்கரமான உடலும் ஒட்டிய வயிறும் சிவந்த கண்ணும் தாடி மீசையும் கையில் கத்தியும் உள்ள மூன்று பிரும்ம ராக்ஷஸர்கள் வசித்தனர். கோரமான உருவமுள்ள இவர்களிடம் பயத்தினால் அம்மரத்திற்கு வெகு தூரத்திற்கு அப்பாலே பிராணிகள் சஞ்சரிப்பார்கள். அருகே எவரும் வரமாட்டார்கள். அம்மூன்றும் பயங்கரமான சப்தம் செய்து கொண்டிருக்கும். அந்த ப்ராம்மணர் அருகில் இவைகள் தோன்றி பயங்கரமான சப்தம் செய்தன.

அதைக் கண்டு நடுங்கிய ப்ராம்மணர் விஷ்ணுவையும் சிவனையும் நினைத்து ஓ! பயத்தைப் போக்கடிக்கும் தேவேசா! என்னைக் காப்பாற்றும்! சரணமடைந்த என்னைக் காக்க உம்மைத் தவிர வேறு எவரும் இல்லை என்று கதறிக்கொண்டே பயந்து நடுங்கி ஓடினார். அவரைத் துரத்திக்கொண்டு ஓடிய ப்ரும்மராக்ஷஸர்கள் அவரை ஏற இறங்க நன்றாகப் பார்த்தனர். அந்த தர்சனத்தினால் அவர்களது பாபம் நீங்கி நல்லெண்ணம் உண்டாகி நமஸ்காரம் செய்து அஞ்சலியுடனவரைத் துதித்தனர். ஓ! ப்ராம்மணோத்தமா! உமது தர்சனத்தினால் எங்கள் பாபம் அகன்றது. உமது பிறவி லோகோபகரமானது என்று கூறியதைக் கேட்டு ப்ராம்மணனது அச்சம் அகன்றது. தைரியமாக அவர்களைப் பார்த்து நீங்கள் யார்? எந்தப் பாபத்தினால் பயங்கரமான ரூபத்தைப் பெற்றீர்கள்? நிச்சயமாக நீங்கள் செய்த கர்மா வித்வான்களால் வெறுக்கத்தக்கதாக இருக்கும். எதனால் உங்களுக்கு நற்கதி கிடைக்கும்? கூறுங்கள் என்றார். இதைக் கேட்டவுடன் இவைகளுக்கு முற்பிறவியும் தாங்கள் செய்த பாபமும் நினைவிற்கு வந்தன. நான் திரவிட தேசத்தில் கணக்குப் பிள்ளையாக இருந்தேன். மிகக் கொடூரமான பேச்சும் மனமும் உள்ளவன். மந்த்ரம் என்ற ஊரில் இருந்து ப்ராம்மணர்களுடைய சொத்தை எல்லாம் அக்கிரமமாகச் சாப்பிட்டேன். எனது பந்துக்களுக்கோ, ப்ராம்மணர்களுக்கோ, ஏழைகளுக்கோ ஒருநாள்கூட ஒருவருக்கும் அன்னம் அளித்ததில்லை. நம்பிய ப்ராம்மணரை ஏமாற்றி, சாப்பிட்ட ப்ராம்மணர் சொத்து ஏழுதலைமுறை குலத்தைக் கொளுத்தும். அதே திருடிச் சாப்பிட்டால் சந்திர ஸூர்யர் உள்ளவரை ரௌரவாதி நரகங்களை அளித்து ப்ரம்ம ராக்ஷஸராகப் பூமியில் பிறக்கச் செய்யும். இதற்குப் பரிகாரம் நீர்தான் தேட வேண்டும் என்று முதல் பிரும்மராக்ஷஸ் கூறியது.

# கார்த்திகை மாஹாத்ம்யம்

இரண்டாவது ப்ரும்மராக்ஷஸ் கூறியது: நான் ஆந்திர தேசத்தில் ப்ராம்மணனுகப் பிறந்து, பெற்றோரை நிந்தித்து, அவர்களுக்குப் பழைய அன்னத்தை அளித்து, அவர்களை அடித்து ஹிம்ஸித்ததாலும், பந்துக்களான ப்ராம்மணர்களுடைய தனத்தை அபஹரித்ததாலும், சிறிதளவுகூட தான தர்மம் செய்யாததாலும், எட்டு யுகம் வரை நரகத்தை அநுபவித்து ப்ரும்மராக்ஷஸ ரூபத்தை அடைந்தேன். இந்தப் பாபச் சேற்றிலிருந்து கரையேற்றுவது தங்கள் கடமை என்றது.

மூன்ருவது ப்ரும்மராக்ஷஸ் ப்ராம்மணனை வணங்கி, ஐயா! நான் ஆந்திரதேசத்தில் விஷ்ணு ஆலயத்தில் பூசைசெய்து வந்த ப்ராம்மணன். ஸ்நானம் ஸந்தியை செய்யாதவன். பிறரை நிந்திப்பவன். விஷ்ணு ஆலயத்தில் தீபம் ஏற்ற வைத்திருந்த எண்ணெயைத் திருடி தாஸி வீட்டிற்கு அளிப்பேன். பெருமாளுக்காக வரும் நெய், கனிவர்க்கம் முதலியவைகளைத் தாஸிக்கே அளித்து, அவளுடன் ரமித்து வந்தேன். அந்தப் பாபத்தினல் பல்லாயிரமாண்டு நரகங்களை அநுபவித்து, பூமியில் பல பிறவிகள் எடுத்து, இப்போது பயங்கரமான ப்ரும்மராக்ஷஸ ஸ்வரூபத்தை அடைந்தேன். என்னையும் காத்து அருள வேண்டும் என்று அதுவும் ப்ரார்த்தித்தது. கார்த்திகை மாஹாத்மியத்தை நன்குணர்ந்த வேதியன், நீங்கள் அஞ்ச வேண்டாம்! நான் காவேரியில் கார்த்திகை ஸ்நாநம் செய்யப் போகிறேன்! என்னுடன் வாருங்கள் என்று கூறி, முதலில் தான் காவேரியில் ஸ்நாநம் செய்தார். உடனே அவர்களும் ஸ்நாநம் செய்ய அவர்களது பாப சரீரம் அகன்று, திவ்ய தேகம் பெற்றனர். வைகுண்டத்

திலிருந்து விமானம் வந்து அவர்களை அழைத்துச் சென்றது. தெரிந்தோ தெரியாமலோ கார்த்திகை சோமவாரத்தில் காவேரி ஸ்நானம் செய்பவர் இத்தகைய பாக்கியத்தைப் பெறுவர். கார்த்திகை ஸ்நானம் பல வாஜபேய யாக பலனைத் தரும். அதை அலட்சியம் செய்தவர் பல பிறவிகளில் நீசனுவார்.

## 4-வது அத்தியாயம்

# தீப தாந பலன்

வஸிஷ்டர்: கார்த்திகை மாதத்தில் ஸந்த்யா காலத்தில் ஶிவாலய கோபுர சிகரம், வாயற்படி, மண்டபம், மூலஸ்தாநம் முதலிய இடங்களில் தீபமேற்றினுல் ஸகல பாபங்களும் அகலும். நெய், நல்லெண்ணெய், இலுப் பெண்ணெய், நார்த்தத் தைலம் (இப்பொழுது அந்தத் தைலம் கிடைப்பதில்லை) முதலியவைகளில் பின்னதைவிட முன்னுள்ளது தீபமேற்றச் சிறந்தது. இவைகள் கிடைக்கா விடில் சிற்றுமணக்கெண்ணெய்யால் தீபம் ஏற்றலாம். பெருமைக்காகவோ, வேறேதேனும் காரணம் கொண்டோ தீபமேற்றினுலே நற்கதி பெறுவாரெனில், பக்தியுடன் தீப மேற்றுபவர் பற்றிக் கூறவும் வேண்டுமா?

பாஞ்சால தேசத்தில் குபேரனுக்கு ஸமமான செல்வ முள்ள ஓர் அரசனிருந்தான். அவனுக்குப் புத்ரபாக்கிய மில்லாததால் கோதாவரீ தீரத்தில் தவம் செய்தான். அச் சமயம் பிப்பலாதர் எனும் முநிவர் அங்கு வந்து, கார்த்திகை மாதத்தில் ப்ரதி திநம் சிவப்ரீதியை நாடிப் பிராம்மணர் களுக்குத் தீப தாநம் செய்துவா! விரைவில் புத்ர பாக்யம் பெறுவாய்! என்றுர். அரசன் பக்தி ஶிரத்தையுடன் சிவ பூஜை செய்யும் பிராம்மணருக்குத் தீபதாநம் செய்து வந்தான். சிவனருளால் ராஜ பத்நி நல்லதோர் நாளிலே புத்ரனைப் பெற்றுள். அரசன் விதிப்படி ஜாதகர்மா செய்து, ஶத்ருஜித் என நாமகரணம் செய்தான். கார்த்திகை தீப

தாந பலன் கைமேல் உடனேயே கிடைத்ததென எல்லோரும் கொண்டாடினர். ஆனால் பூர்வ கர்ம வினையால் புத்ரன் துஷ்டனாகவும், பெற்றோர் பிராம்மணர் தேவர் இவர்களை நிந்திப்பவனாகவும், தாஸி லோலனாகவுமிருந்தான். அதே நகரில் ஒரு பிராம்மண ஸ்திரீ மிக ரூப லாவண்யமுள்ளவளாக இருந்தாள். ராஜ குமாரன், சுந்தர புருஷனும் விடனும் ஆனதால் அவள் தன் பதியை ஏமாற்றி விட்டு ஶத்ருஜித்துடன் இரவில் ப்ரதிதினமும் சேர்ந்து சிற்றின்பம் அனுபவித்து வந்தாள். இதை அறிந்த பிராம்மணன் அவர்களைக் கொல்வதெனத் தீர்மானித்து ஸமயம் பார்த்துக்கொண்டு காத்திருந்தான்.

ஒரு கார்த்திகை ஸோமவாரத்தன்று அந்தக் காமுகர் இருவரும் ஊருக்கப்பாலுள்ள பாழடைந்த சிவன் கோவிலில் சென்று, காம ஸுகத்திலீடுபட்டனர். ஶத்ருஜித் கொண்டுவந்த பானபாத்ரத்தில் விளக்கெண்ணெயைவிட்டு, அவள் தனது புடவையைக் கிழித்துத் திரியாக அமைத்துத் தீபம் ஏற்றி, ஆநந்தமாகப் பேசி விளையாடிக் கொண்டிருந்தனர். பிராம்மணன் மறைந்திருந்து, கோபத்தால் மனைவியை வெட்டி, ராஜகுமாரனையும் வெட்டினான். பழக்கமுள்ளவனாதலால் ராஜகுமாரன் சாகும் நிலையிலிருந்தும், அதே கத்தியைப் பிடுங்கிப் பிராம்மணனை வெட்டினான். ஏக காலத்தில் மூவரும் ரத்த ப்ரவாஹத்தில் தோய்ந்து துடித்துப் பிராணனை விட்டனர். உடனே ஶிவ கிங்கரர் வந்து ராஜகுமாரனையும், அந்த வ்யபிசாரிியையும் விமானத்தில் அமர்த்தித் திவ்ய தேஹம் தந்து, கைலாஸத்திற்கழைத்தனர். யம கிங்கரர் பிராம்மணனது கால்களைக் கட்டி அடித்து, உதைத்து யமலோகத்திற்கழைத்தனர்.

இதைக் கண்ட பிராம்மணன், பாபம் செய்தவர்களுக்குக் கைலாஸம்! ஸ்வதர்மத்தை நன்றாகச் செய்து பாபிகளைச் சிக்ஷித்த எனக்கு இந்த சிக்ஷையா? என்று

கேட்க, ஶிவ தூதர் கூறினர்: சிவன் கருணாமூர்த்தி. கார்த்திகை ஸோமவாரத்தில் எந்தக் காரணங்கொண்டோ தீபம் ஏற்றியவர் பாபத்தை அகற்றிக் கைலாஸமளிக்கிறார். அந்தக் காலமும் ஆலயத்தில் தீபம் ஏற்றுவதும் மஹா புண்யகரமானது. எல்லாத் தர்மங்களையும் செய்து நீர் இதைச் செய்யவில்லை. கோவிலில் கொலை பாதகம் செய்ததால் உமக்கு இந்தக் கதி என்றனர். இதைக் கேட்ட ராஜ குமாரன், தீபபாத்ரம், எண்ணெய், திரி என்ற மூன்றும் சேர்ந்த தீபதான புண்யத்தில் தீபபாத்ரமளித்த புண்யத்தை இவருக்குத் தருகிறேன். இவரும் கைலாஸம் வரட்டும் என்றான். அதனால் அவருக்கும் விமானம் வந்து கைலாஸம் சென்றார். ஆலயத்தில் தீப வரிசையை ஏற்றி வைத்தால் க்ஞானமும், முக்தியும் உண்டாகும்.

### 5-வது அத்தியாயம்

## மாஹாத்ம்ய ஶ்ரவண பலன்

கார்த்திகை மாதத்தில் கீதா படனம் ச்ரவணம் செய்தால் பாம்பின் தோல் பாம்பைவிட்டு விலகுவதுபோல் ஸகல பாபங்களுமகலும். கிருஷ்ண அல்லது வெளுப்பு துளஸியால் பக்தியுடன் பகவானைப் பூஜித்தால் வைகுண்டம் சென்று ஆநந்தமனுபவிக்கலாம். கீதையின் விபூதியோகம், விஶ்வரூப யோகம், பக்தியோகம் இவைகளைப் பகவானது ஸன்னதியில், பூர்ணமாகவோ சிறிதளவோ பாராயணம் செய்தாலும் பாபகர்மா அடியோடு அகலும். முக்தி பெறலாம். இம்மாத ஶுக்லபக்ஷத்தில் வநபோஜனம் செய்பவன் வைகுண்டம் செல்வான். வநபோஜனமென்பது, கார்த்திகை மாதம் நெல்லி மரத்தடியில் அன்னமளிப்பதாம். ஜபம் ஹோமம் தேவார்ச்சநம் போஜநம் தர்ப்பணம் முதலிய காலங்களில் பேசுவதால் (பேசத் தகாதவருடன் பேசுவதால்) உண்டான பாபத்தைப் போக்கும் கர்மா இது. கார்த்திகை மாதம் அடர்ந்த மரங்களுள்ள வநத்தில் நெல்லி மரத்தடியிலே ஸாளக்ராமத்தை வைத்து விதிப்படி

ஸாதுக்களுக்கு அன்னமளிப்பவர் ஸகல பாபங்களிலிருந்து விடுபட்டு வைகுண்டம் செல்வர்.

காவேரீ தீரத்தில் தேவசர்மா என்ஞேர் வேதியர் வேதவேதாங்க பாரங்கதஞக இருந்து முறைப்படி ஸகல தாந தர்மங்களைச் செய்துவந்தார். அவரது புத்ரன் அதற்கு நேர்மாருக இருந்தான். அவர் புத்ரனை நல்வழிப்படுத்த பல தர்மங்களைக் கூறி, முடிவாகக் கார்த்திகை மாதத்திலாவது தீப வரிசையை கோயிலில் ஏற்றிவை என்ருர். அந்த எண்ணெயை வீணுக்குவதைவிட பக்ஷ்யங்களைச் செய்து சாப்பிடலாமே! என்ருனவன். கோபங்கொண்ட பிதா, எண்ணெயைச் சாப்பிடும் எலியாகக் கடவாய் என சபித்தார். தன்னை மன்னித்து ஶாபமகல வழி கூறும்படி வேண்டினுனவன். கருணையுள்ள தேவசர்மா, கார்த்திகை புராண ஶ்ரவணம் செய்தபோது நீ உனது ருபத்தைப் பெறுவாய் என்றருளினுர்.

ஸகல பாபங்களையுமகற்றி எல்லோருக்கும் நற்கதி தரும் புண்ய க்ஷேத்ரமான கஜாரண்யத்தில் இவன் ஒரு பெரிய எலியாகப் பிறந்தான். சந்து பொந்துகளில் ஸஞ்சாரம் செய்து, வயலிலுள்ள தான்யங்களையும், கிராமத்திலுள்ளோர் ஏமாந்தால் அவர்களது வீட்டிலுள்ள நெய், எண்ணெயையும் குடித்து வளர்ந்து வந்தான். இப்படிச் சில காலம் செல்ல, ஒருநாள் தற்செயலாக கௌஶிக மஹாமுநி சிஷ்யர்களுடன் சேர்ந்து கஜாரண்யத்தில் கார்த்திகை புராண படந ஶ்ரவணம் செய்துவந்தார். அச்சமயம் ஜீவஹிம்ஸையே உருவாயமைந்த வேடன் ஒருவன் கௌஶிகரையும் அவர் சிடர்களையும் கொல்ல வில்லை வளைத்து அருகில் ஓடிவந்தான். அந்த க்ஷணத்தில் திடீரென அவனது மநம் மாறிற்று. வில்லையும் அம்பையும் கீழே எறிந்தான்.

என்ன ஆச்சரியம்! பல பிறவிகளிலும் பல்லாண்டுகளாகவும் நான் செய்துவந்த வேட்டையாட மநமில்லையே!

டுங்களை வணங்கிப் பூஜிக்க அல்லவா மநம் செல்கிறது? காரணமென்ன? என்றான். அப்பா! இது கார்த்திகை மாதம். இங்கு அதன் மாஹாத்ம்யத்தைப் படித்துப் பலர் ஸ்ரவணம் செய்கின்றனர். இந்தப் புண்யமும் இம்மாதம் செய்யும் ஸ்நாந தாந ஜப ஹோமாதிகளும் அழிவில்லா புண்யந் தரும். பல பிறவிகளில் செய்த பாபத்தை அகற்றும் என முநிவர் கூறிக்கொண்டிருக்கும்பொழுதே பொந்தில் பதுங்கியதைக் கேட்டுக்கொண்டிருந்த எலி வெளியே ஓடிவந்து தன் உடலைவிட்டுத் திவ்ய தேஹம் பெற்றது.

கௌஸ்ரிகர் ஆச்சர்யமடைந்து, நீ யார்? என வினவ, அவர் தனது ஸமாசாரத்தைக் கூறி, தந்தை சொற்படி கார்த்திகை புராண ஸ்ரவணம் செய்ததால் என் பாபம் அகன்றதுடன் வைகுண்டமும் கிடைத்ததென்று கூறி, விமாநத்திலேறிச் சென்றார். வேடனும் இதைக் கண்டு தனது பாபத் தொழிலை விட்டுப் புராண ஸ்ரவணத்தில் ஈடுபட்டான். புராண ஸ்ரவணம் ஸர்வ பாபங்களையும் அகற்றும். இது ஸத்யம் எனப் பிரும்மா கூறினார். வேடனை நீயும் இதனால் நற்கதி பெறுவாய் என்றார் கௌஸ்ரிகர்.

### 6-வது அத்தியாயம்

## கார்த்திகை ஸ்நாந தாந ஸ்ரவண மஹிமை

கார்த்திகை மாதம் 30 நாளும் கஸ்தூரியால் அபிஷேகம் செய்து கமலங்களால் கமலநாபனை அர்ச்சித்தால் கமலாதேவி அங்கு ஸ்திரமாக இருப்பாள். பில்வ தளத்தால் மஹாவிஷ்ணுவையும் மஹேஸ்வரனையும் பூஜிப்போர் மறுபடி பூமியில் பிறக்கமாட்டார். நெல்லி மரத்தடியில் பகவானை அர்ச்சிப்போரைக் கண்டு யமன் நடுங்குவான். ஸாளக்ராமத்தைத் துளஸீ தளத்தால் அர்ச்சிப்பது சிறந்த புண்யம். வைகுண்டஞ் செல்ல இதே சிறந்த ஸாதநம். மாவிலைத் தோரணம் கட்டுவது, மண்டபத்தைப் புஷ்பங்களால் அலங்கரிப்பது, நமஸ்காரம் செய்வது ஆகிய இவை

ஒவ்வொன்றும் அஶ்வமேதப் பலனைத் தரும். ஸ்நாநம் வஸ்த்ர தாநம், ஜபம், ஹோமம், அர்ச்சனை ஆகியவை பத்தாயிரம் அஶ்வமேத பலனைத் தரும். கார்த்திகை மாதம் கோயிலில் த்வஜம் கட்டிப் பறக்கும்படி செய்தால் காற்று, புழுதியைப் போக்குவதுபோல் ஸகல பாபங்களையும் போக்குமது. கோயிலை மெழுகிக் கோலம் போட்டால் அதன் புண்யம் எவ்வளவென்று பிரும்மாவினாலும் கூற முடியாது.

எள், நெல், தும்பைப்பூ, முதலியவைகளுடன் சதுர்த்தசியிலும் பௌர்ணமியிலும் தீபமேற்றுபவர் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும், நீண்ட ஆயுளும்பெற்று, முடிவில் முக்தியும் பெறுவர். புஷ்ப மாலைகளால் மண்டபத்தை அலங்கரிப்பது ஸகல பாபங்களையும் அகற்றும். துளஸிக்கட்டையால் தூபமளிப்பது, ஸ்வாமியின் முன் நர்த்தனம் செய்வது, பக்தியுடன் அன்னதாநம் செய்வதும் மஹாபுண்யம். ப்ரதி திநம் ஸுவர்ணமல்லது வெள்ளி, ஶக்தியில்லாவிடில் வெண்கலம், பித்தளை இவைகளால் ஆகிய பாத்ரத்தில் நெய்விட்டுத் தீபமேற்றி, ஸத் ப்ராம்மணனுக்குத் தாநம் செய்தால் க்ஞாநமுண்டாகும்.

"ஸர்வக்ஞாந ப்ரதம் தீபம் ஸர்வ ஸம்பத் ஸுகாவஹம்।
தீபதாநம் ப்ரதாஸ்யாமி ஶாந்திரஸ்து ஸதாமம॥

என்ற மந்திரத்தைக் கூறி, தீப தாநம் செய்யவேண்டும். வித்யை, ஆயுஸ், ஸந்ததி, ஸ்வர்க்கம் முதலியவைகளைத் தரும்.

திராவிட தேசத்தில் பதி புத்ரன் பந்து முதலிய ஒருவருமில்லாத ஒரு ஏழை விதவை பிச்சை எடுத்து ஜீவித்து வந்தாள். ஸ்வாமி நிவேதநம் செய்யாதது, பழையது, பாபிகளுடைய அன்னம் இவைகளைப் புஜிப்பாள். பரஸ்த்ரீ பரபுருஷர்களைச் சேர்த்து வைப்பது, கோள் சொல்வது முதலிய பாபத் தொழில் செய்துவந்தாள். கதா ஶ்ரவணம்

தீர்த்த ஸ்நாநம் ஜபம் பூஜை ஆகிய நற்கருமம் எதையும் செய்தறியாள். அவளைத் தற்செயலாக ஒரு பிராம்மணன் ஸ்ரீரங்கத்தில் ஸந்தித்து. கருணையால் நல்லுபதேசம் செய்தார். பெண்ணே, ஐந்து பூதங்களால் உண்டான உடல் துன்பத்திற்கும் நோய்க்கும் இருப்பிடமானது. இறக்கும் பொழுது ( ஐம்பூதங்களும் பிரிந்து செல்லும். நீர்மேல் குமிழிபோல் க்ஷணத்தில் அழியக் கூடியது. இதை நித்ய மென்றெண்ணாதே. நித்யமாய் ஸ்த்யமாய் ஆநந்தமாய் இருக்கும் இறைவனை நினை. காமம் கோபம் முதலிய துர்க் குணங்களை விடு. விஷ்ணுவின் திருவடிகளை நினை. பக்தி யுடன் கார்த்திகை ஸ்நாநம் செய். சிறிதாவது தாநம் ஜபம் செய். அது அழிவற்ற பலனைத் தரும். ஸத் பிராம் மணனுக்கு தீப தாநம் செய். ஸகல பாபங்களுமகலும். ஸந்தேஹமில்லை; என்று கூறி பிராம்மணர் சென்றார்.

இவளுக்கு அந்த உபதேசம் மநதில் பதிந்தது. தனது பாபங்களை நினைத்து வருந்தி, கார்த்திகை ஸ்நாநம் செய்ய ஆரம்பித்தாள். தீபதாநம், விஷ்ணு பூஜை, புராண ஶ்ரவணம் இவைகளில் ஈடுபட்டாள். ஒரு மாதம் தவறாமல் கார்த்திகை ஸ்நாநம் செய்ததால் ஶீதஜ்வரம், வயிற்று நோய் முதலியவைகள் தோன்றி மிகக் கஷ்டப்பட்டு முடி வில் இறந்தாள். அநாதையான அவளை ஸ்வர்க்கத்திலிருந்து விமாநம் வந்து அழைத்துச் சென்றது. பலகாலம் ஸ்வர்க ஸுகத்தை அனுபவித்தாள். தெரிந்தோ தெரியாமலோ செய்த ஸகல பாபங்களையும் அகற்றவல்லது கார்த்திகை புராண ஶ்ரவணம்.

### 7, 8-வது அத்தியாயம்

## பிராயச்சித்தமில்லாமல் பாபமகலுமா?

ஜநகர் வஸிஷ்டரை வினவினார்: அவரவர் செய்த கர்ம பலனை அனுபவித்தே தீரவேண்டும். இதுவரை தாங்கள் கூறியதில் மிகக் கடுமையான பாபங்களைச் செய்

தவர்கள்கூட ஸ்வல்பபுண்யமான கார்த்திகை ஸ்நானம் தீபதானம் புராணஶ்ரவணமிவைகளால் நற்கதி அடைந்த தாகக் கூறினீர்கள். அந்தந்த பாபகர்மா அததற்கேற்பட்ட க்ருச்ர சாந்த்ராயணாதி பிராயச்சித்தமின்றி எப்படி அகலும்? வஜ்ரமலையை நகத்தால் கிள்ள முடியுமா? பற்றி எரியும் வீட்டை ஆசமன தீர்த்தத்தால் அணைக்க முடியுமா? மலையிலிருந்து விழுபவனை இடையில் தொங்கும் புல் காக்குமா? மஹா நதி ப்ரவாஹத்தை புல்களால் கடக்க முடியுமா? மஹா பாபங்களைச் சிறிய புண்யம் போக்குமா? என்ற ஸந்தேஹத்தை அகற்ற வேண்டும் எனக் கேட்க வஸிஷ்டர் கூறுகிறார்.

வஸிஷ்டர்: மஹாராஜ! நன்றாகக் கேட்டாய்! வேத, தர்ம நூல்களில் உள்ளவைகளைப் பலமுறை யான் ஊன்றிப் படித்ததுண்டு. தர்மம் பலவகைப்படும். ஸ்தூல தர்மம், ஸூக்ஷ்ம தர்மம், ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்பவைகளைக் கேள். ஸத்வ குணத்துடன் செய்யும் தர்மம் ஸூக்ஷ்மமாகும். அதே உத்தமமானது. ரஜோ குணத்தால் அநுஷ்டிக்கப்படும் உபவாஸம், ஹோமம், பாராயணம் முதலின மத்யமாம். பிராயஶ்சித்த கர்மாக்களைச் சிறிது செய்வது, பகவத்யானம் செய்தால் போதுமென அதைச் செய்யாமல் விடுவது இத்தகையது தாமஸமாகும்.

ஸாத்விகமான ஸூக்ஷ்ம தர்மத்தைக் கேள். அது ஸ்வல்பமாயினும் ஸத்வமுள்ளதாலும் தக்க காலத்தில் செய்யப்படுவதாலும் அது அக்ஷய்யமான பலனைத் தரும். கர்மகதியை எளிதில் நாமறியமுடியாது. மலைபோல் கட்டைகள் குவிந்திருந்தாலும் குந்துமணி போன்ற தீ, அதை அனைத்தையும் எரித்துவிடும். வெகு காலமாக வீட்டில் சூழ்ந்திருக்கும் கனமான இருள் ஒரு சிறிய கைதீபம் வந்தவுடன் பறந்தோடுவதைப் பார்க்கிறோம். அதேபோல் பகவான் நாம ஸங்கீர்த்தனம், தீப தானம்,

கீர்த்தநம், ஶ்ரவணம் முதலியன உருவில் சிறியவைகளாயினும், பெரிய காரியத்தை ஸாதிக்க வல்லவை.

## மஹாபாபிக்கும், நாம நற்கதி தந்தது

கான்யகுப்ஜ தேசத்தில் ஸத்யநிஷ்டன் என்றோர் வேதியனிருந்தான். தர்மவதீ என்ற அவனது பத்நீ மிக உத்தம பதிவ்ரதை. இவர்களுக்கு அஜாமிளன் என்றோர் புத்ரன் பிறந்தான். அவன் யௌவன வயதில் காமுகனாகி பெற்றோருக்கு அடங்காமல் அவர்களை அடித்து ஹிம்ஸித்து வந்தான். மற்றோர் ப்ரஷ்ட ப்ராம்மணன் வீட்டில் வேலை செய்து வந்த ஒருவளிடம் சேர்ந்து உண்பதும் உறங்குவதுமாக இருந்தான். வேதோக்த கர்மாக்களை விட்டு ஸதா காமலீலையிலீடுபட்டிருந்தான். அவனை ஊராரும் உறவினரும் ஊரைவிட்டு விரட்டிவிட்டார்கள். அவன் வநத்திலுள்ள ஒரு சண்டாளனது வீட்டில் குடியிருந்து வேட்டையாடி பசு பக்ஷி மிருக மாம்ஸங்களைப் புஜித்தான். ஒருநாள் அவன் மனைவி, விறகு ஒடிக்க மரத்தின் மீதேறினாள். அங்கிருந்து கீழே விழுந்து பிராணனை விட்டாள். அஜாமிளன் அவளைக் கண்டு கதறி அழுது ஒரு பள்ளத்தில் அவளது உடலைத் தள்ளிவிட்டு வீட்டிற்கு வந்தான். காம வெறி கொண்டவனாதலால் தன் மனைவியிடம் பிறந்த பெண்ணையே மனைவியாகக் கொண்டு களித்தான். அவள். தந்தையான அஜாமிளன் மூலமாக பல புத்ரர்களைப் பெற்றுக்கொண்டாள். ஆனால் கடைசிக் குழந்தையான நாராயணனைத் தவிர எல்லோரும் இறந்துவிட்டனர். வேறு புத்ரரில்லை. இவன் கடைசி புத்ரன். ஆதலால் உண்ணும்போதும், உடுக்கும் போதும், குடிக்கும் போதும் நாராயணா! நாராயணா! என்று ஸதா கூறி அவனை லாலனை செய்தான். மரணகாலம் நெருங்கிற்று. கோரரூபமான யம கிங்கரர் பாஶக்கயிற்றுடன் அருகில் நின்றனர். வெகு தூரத்தில் விளையாடும் புத்ரனை நாராயணா என உரக்க அழைத்தான். உடனே பிராணன் போயிற்று.

9-வது அத்தியாயம்

## யம தூத, ஹரி தூத ஸம்வாதம்

*ஹரிதூதர்: யம தூதர்களே! உங்கள் தலைவன் யார்? யாரை யம தண்டனைக்காக அழைத்துவரச் சொன்னார்?*

*யமதூதர்:* சூர்யன், அக்னி, ஆகாசம், வாயு, பூமி சந்த்ரன் இரு ஸந்த்யைகள் ஆகியவை மநிதன் செய்யும் தர்மா தர்மங்களுக்கு ஸாக்ஷிகள். இவர்களைக் கொண்டு பாபஞ் செய்பவர்களை சிக்ஷிக்கிறார். வேதமார்க்கத்தை விட்டு வேத ஸ்மிருதிகளை நிந்திப்பவர், ஸாதுக்கள், பெற்றோர், குரு இவர்களை வெறுத்து அடித்து தூஷிப்பவர். பொய் கூறுபவர், பரஹிம்ஸை புரிபவர், குலாசாரத்தை விட்டவர், பரஸ்த்ரீலோலர், தாநமளித்த பொருளைப் பிடுங்கிக் கொள்பவர், டாம்பீகர், தயாசாந்தி இல்லாதவர், தநத்திற்காக பொய் ஸாக்ஷியம் கூறுபவர், ஆத்மஸ்துதி செய்பவர். மித்ரத்ரோஹீ, நன்றிகெட்டவர், விவாஹத்திற்கு விக்நம் செய்பவர், புண்யகாலத்தில் ஸ்நாந தாந ஜல தர்பணாதிகளைச் செய்யாதவர் ஆகியவர்களை யமலோக மழைத்து வா.

விபூதி ருத்ராக்ஷமணிந்தவர், தாந ஹோம ஜப பூஜா நிரதர், அச்யுதாநந்த கோவிந்த என்போர், அந்த்ய காலத்தில் ஹரிநாமாவைக் கூறுவோர், பஞ்சமஹாபாதகம் செய்தவராயினும் வேறெந்த பாபம் செய்திருந்தாலும் பகவன் நாம அவைகளைப் போக்கும். ஒரு ஸங்கேதமாகவோ பரிஹாஸமாகவோ வேறு எப்படியோ கூறப்படும் நாம, ஸகல பாபங்களையுமகற்றும். பல பிறவிகளில் செய்ததும் அறிந்தோ அறியாமலோ செய்ததும் எந்த பிராயஸ்சித்தத்தாலும் அகலாததுமான பாபங்கள் ஹரிநாமாவைக் கூறியவுடன் பறந்தோடும். அத்தகையவரிடம் செல்லாதீர், என யஜமானனது ஆஜ்ஞை என்று யமதூதர் கூறி மறைந்தனர்.

அந்த்ய காலத்தில் தன் செல்லப்பிள்ளையை நாராயண என்றழைத்ததாலும், அதற்குப் பின் யாதொரு பாபத்தை யும் செய்யாமல் இறந்ததாலும் விஷ்ணு பக்தர் அவனை வைகுண்டத்திற்கழைத்துச் சென்றனர். போகும்போது தனது பாபத்தை நினைத்து வருந்தி பகவன் நாமாவின் பெருமையைக் கொண்டாடிக் கொண்டே சென்றான் அஜாமிளன்.

## 10-வது அத்தியாயம்

## அஜாமிளனது முற்பிறவி

வஸிஷ்டர்: தெரியாமல் தொட்டாலும் தீ சுடுவது போல் ஹரிநாம எப்படிக் கூறினாலும் பாபங்களை அகற் றும். அஜாமிளன் முற்பிறவியில் ஸௌராஷ்ட்ர தேசத் தில் சிவபூஜை செய்து வந்த குருக்கள். ஆனால் பூஜா மந்த்ரமொன்றும் தெரியாது. சிவ சொத்தைக் களவாடு வான். பூஜை செய்யும்போது மநமொன்றை நினைக்கும். வாயொன்று பேசும். சிவனைச் சிந்தியான். ஶிவனுக்கெதிரில் கால்களை நீட்டிப் படுப்பான். காமுகர்களுடன் கூடி ஆல யத்தில் விகாரமாகப் பேசுவான். தன்னுடலை ஸதா அலங்கரிப்பான். அவ்வூரில் ஒரு ஏழைப் பிராம்மணன் இருந்தான். அவனது மனைவி அழகும் துர்குணமும் உள்ளவள். பதி, பிச்சை எடுத்து வந்து பசிக்கின்றது விரைவில் அன்னம் போடென பலமுறைக் கேட்டும், காதில் கேளாததுபோல் எதையோ மநதில் நினைத்துக் கொண்டிருந்தாள். பசியால் கோபமதிகமாகி தடியாலடித் தான். அவளும் அந்தத் தடியாலேயே பதியை அடித்தாள். வலி, பசி, அவமானம் மூன்றுமவனை வாட்டின. வேறு கிராமம் சென்று பிச்சை எடுத்துப் பசியாற்றினன்.

அவனது மனைவி நன்கு அலங்காரம் செய்து கொண்டு தாம்பூலம் தரித்து எதிரில் வந்த அழகாயிருந்த ஒரு அன்னியனை நாடி காம சுகமளிக்க வேண்டினள். அவன்

பரம யோக்யமானவனுதலால், பாபம் செய்யத் துணியமாட்டேன். உயர் குலத்தில் உதித்த நீயுமிதைச் செய்யாதே எனக் கடிந்து பேசினுன். அவனை அருகிலிருந்த உலக்கையால் அடித்துத் தள்ளி தற்செயலாக வழியில் வந்த முன் கூறிய சிவபூஜை புரியும் வேதியனைக் கண்டாள். இருவரும் காமுகரானதால் இரவெல்லாம் கூடி இன்பம் அனுபவித்தனர். காலையில் அவள் தன் வீட்டிற்கு வர, பதியும் அங்கு வந்திருந்தான். கோபமகன்று இருவரும முன்போல் வாழ்ந்தனர். குருக்களுடன் நித்யம் அவள் கூடுவதை நிறுத்தவில்லை. இருவரும் இறந்த பின் பல நரகங்களை அனுபவித்து அவன் அஜாமிளனுகவும், அவள் ஒரு சண்டாளப் பெண்ணுகவும் பிறந்தனர். இவளது தந்தை, இவள் பிறந்தநாள் எப்படி இருக்கிறது? என ஒரு ஜோஸ்யனைக் கேட்டான். குழந்தை உன் வீட்டிலிருந்தால் நீ இறப்பாய் என்று ஜோஸியர் கூற, தன் உயிரைக் காக்க இந்த குழந்தையைக் காட்டில் கொண்டுவிட்டுத் திரும்பினுன். அங்கு ஒருவன் இக் குழந்தையை எடுத்து வளர்த்துவந்தான். அஜாமிளன், அவளுடன் கூடி வாழ்ந்து பல புத்ரர்களைப் பெற்று அவளிறந்தபின் அவளது பெண்ணையே மணந்து முடிவில் கடைசிக் குழந்தையை நாராயணு என்றழைத்து வைகுண்டம் சென்ருன்.

பகவன் நாமாவைக் கூருதவன், பகவத் சரிதம் கேளாதவன், பகவத் பாத ஸ்மரணை இல்லாதன் எப்படி நற்கதி அடைவான்? அவனது பாபம் எப்படி அகலும்? அநன்ய பக்தி செய்வோர் அச்யுதன் திருவடி அடைவது ஸத்யம். இச்சரிதத்தைப் படித்தவர், கேட்டவர் பாபமகலும்.

### 11-வது அத்தியாயம்

## புராணம் நடத்தினவர்க்கே நற்கதி

தூர்வை, தர்ப்பாக்ர மிவைகளால் கார்த்திகை மாதத்தில் அர்ச்சிப்பது மிகச் சிறந்த புண்யம். கலிங்க தேசத்தில்

மந்தரன் என்ரேர் வேதியனிருந்தார். ஸ்நாநம் ஸந்த்யை முதலிய ஸ்வதர்மத்தை விட்டவன். பிழைக்க வழியின்றி ஒருவரிடம் கூலிக்காரனுக இருந்தான். அவனது மனைவி ஸுஶீலா பெயருக்கேற்றபடி நல்லொழுக்கம் உள்ளவள். அந்த நிலையிலும் பதியை நிந்திக்க மாட்டாள். மந்தரனே மனைவியை விட்டு வநம் சென்று வழிப்போக்கரைக் கொன்று அவர் பொருளைக் கொண்டு ஜீவித்தான். ஒருநாள் வேதியனொருவன் நிறைய பொருளுடன் வர அவனை மரத்தில் கட்டி அவன் தநத்தை அபஹரித்தான். இதைக் கண்ட வேடன் ஒருவன் இருவரையும் கொன்று பொருளை எடுத்துச் சென்ருன். அச்சமயம் பசியுடன் வந்த புலி இவனை அடிக்க இவன் அதை அடிக்க வேடனும் புலியும் இறந்தனர். நால்வரும் ஒரே காலத்தில் ஒரே இடத்தில் இறக்க யம தூதர்கள் இவர்களை யம லோகத்திற்கு அழைத்துச் சென்று புழுக்கள் நிறைந்த கிணறு, மலம் நிறைந்த நரகம், மிக்க பயங்கரமான இருள், கொதிக்கும் ரத்தம் உடைய இடம் ஆகிய நரகங்களில் தள்ளி ஹிம்ஸித்தார்கள்.

ஸுஶீலா எனும் மந்தரனது மனைவியோ ஸகல தர்மங்களையும், ஆசாரங்களையும் அநுஷ்டித்து பக்தியில் ஈடுபட்டு பதியையும் பகவானையும் ஸதா த்யானம் செய்து கொண்டு ஸத்ஸங்கத்தில் ஈடுபட்டாள். ஒருநாள் தற்செயலாக இவளது ஊரை நாடி வந்த ஒரு யோகி பகவானை நினைத்து அவர் நாமாவைக் கூறி மயிர்க்கூச்சல் எடுக்கக் கூத்தாடினர். அவரது பக்தியையும் ஆனந்தக் கண்ணீரையும் கண்டு எல்லோரும் அவர் திருவடியில் விழுந்து தத்தம் வீட்டிற்கு அழைத்தனர். ஸுஶீலா தான் ஏகாக்கினியாக இருப்பதால் தங்களை அழைத்து விருந்தளிக்க முடியாதவளாய் இருக்கிறேன் என்று கதறினள். அவளது பக்தியைக் கண்டு ஸந்தோஷம் அடைந்த யோகி நீ வருந்தாதே; நான் உனது வீட்டிற்கு மாலையில் வந்து

ஒரு முகூர்த்த காலம் விஷ்ணு புராணப் படநம் செய்கி றேன். உன் நிலை எனக்குத் தெரியும். ஆகையால் தீபமும் வத்தியும் மாத்திரம் நீ தயார் செய். நான் எண்ணெய் கொண்டு வருகிறேன் என்றார். இதைக்கேட்ட ஸுசீலா பரம சந்தோஷத்துடன் தன் வீட்டை பசும் சாணியால் மொழுகிக் கோலமிட்டு சுத்தமான பருத்தியைக் கொண்டு திரி தயார் செய்தாள். யோகியும் சொன்னபடி எண் ணெய் கொண்டுவர இவள் பக்தியோடு தீபம் ஏற்றி வந்தாள். அவர் ஆத்மார்த்தமாக புராணம் படித்துப் பொருளும் கூறி வந்தார். ஸுசீலா தான் பக்தியுடன் சிரவணம் செய்வதோடு வீடு வீடாகச் சென்று பக்தர்களை யும் புராண சிரவணம் செய்ய அழைத்து வந்தாள். கார்த்திகை மாதம் முடிந்தபின் அவர் வந்த வழியே சென்று விட்டார். ஸுசீலையும் ஹரித்யானத்துடன் மரண மடைய சங்க சக்ர பீதாம்பரதாரிகளான விஷ்ணு தூதர் நன்றாக அலங்கரிக்கப்பட்ட விமானத்தைக் கொண்டு வந்து அதில் ஏறும்படி வேண்டினர். விமானம் வைகுண்டம் செல்ல இடையிலே நரகத்தில் வீழ்ந்து தவிக்கும் தம் பதி யுடன் மூவரையும் கண்டு இவர்கள் யார்? ஏன் நரகத்தை அனுபவிக்கிறார்கள்? என்றாள்.

தூதர்கள், ஸுசீலே! வேத தர்மத்தை விட்டு வேட்டையாடி மாம்ஸம் விற்று திருடி ஜீவனம் செய்த உன் பதி இவர். பொருளைப் பறிப்பதற்காக உன் பதி யால் மரத்தில் கட்டப்பட்ட வேதியர் மற்றவர். இவ்விரு வர்களையும் கொன்று பொருளைத் திருடிய வேடனும் அவனைக் கொன்று இறந்த புலியும் இவர்கள். உன் பதி, தர்மத்தை விட்டதாலும், நண்பனான வேதியனைத் துரோஹம் செய்து அவன் பொருளை அபகரித்ததால் மற்றோர் பிராம்மணரும், இருவர்களையும் கொன்ற ப்ரும்ம ஹத்தி தோஷத்தால் வேடனும், அந்தப் புலி முற்பிறவியில் திராவிட தேச ப்ராம்மணனாக இருந்து துவாதசியில்

சாப்பிடத் தகாததை எல்லாம் சாப்பிட்ட தோஷத்தினுல் புலியாகியும் நரகத்தை அனுபவிக்கின்றூர்கள் என்று கூறினுர்கள்.

தூதர்களே! எந்தப் புண்யத்தினுல் இவர்கள் நரகத்திலிருந்து வைகுண்டம் செல்வார்கள்? அதைக் கூறுங்கள் என்ருள். கார்த்திகை புராண சிரவண பலத்தை உன் பதிக்களி. தீபத் திரி தயார் செய்த புண்யத்தை வேடனுக்கு கொடு. தீபம் ஏற்ற பாத்திரமளித்தாயே! அந்தப் புண்யத்தை புலியாயிருக்கும் வேதியனுக்கு அளி. கதை கேட்க வீடு வீடாகச் சென்று எல்லோரையும் அழைத்து வந்த புண்யத்தை மித்ரத் துரோஹம் செய்த ப்ராம்மணனுக்கு அளி என்று கூறினுர்கள். ஸுஶீலையும் ஒவ்வொன்ருக. "தத்தம்" "தத்தம்" என்று கூறும்பொழுது ஒவ்வொருவராக திவ்யதேஹம் பெற்று ஸுஶீலையையும் கார்த்திகை மாஹாத்ம்யத்தையும் கொண்டாடி வைகுண்டம் சென்ருர்கள்.

12-வது அத்தியாயம்

## கார்த்திக தர்மமும் வைச்ய சரிதமும்

ஸோமவாரம், ஏகாதசி, துவாதசி பௌர்ணிமா ஆகியவை ஒன்றைவிட ஒன்று பலமடங்கு விசேஷமானவை. துவாதசியில் அன்னதானம் செய்தால் கங்கா தீரத்திலே கிரஹண காலத்தில் கோடி ப்ராம்மணருக்கு அன்னமிட்ட பலன் உண்டாகும். வ்யதீபாதம் அமாவாஸ்யா இவைகளைவிட மிகச்சிறந்த புண்யகாலம் த்வாதசீ. கார்த்திகை சுக்ல த்வாதசீ ப்ரபோதிநீ எனப்படும். அன்று தயிரன்னம், கோதாநம், வஸ்த்ரதாநம், தீபம், யக்ஞோபவீதம், துளஸி, சுவர்ண துளஸி, ஸாளக்ராமம் இவைகளை தானம் செய்வது மிகச்சிறந்த புண்யம். ஸ்வர்க்கம், வைகுண்டம், ஆகிய லோகங்களையுந்தரும்.

கோதாவரீ தீரத்தில் ஒரு வைஶ்யனிருந்தான். பொருள் சேர்ப்பதே அவனது ஆசை. வட்டிக்குப் பணம் அளித்து மேன்மேலும் கடன்காரனை ஹிம்ஸித்துப் பணம் சேர்ப்பான். ஒரு ஏழை பிராம்மணனுக்கு பணந்தந்து வட்டியுடன் மூலதநத்தைத் தா என அடிக்கடி நிர்ப்பந்தித்தான். எப்பாடுபட்டாவது அப்பொருளைத் தந்துவிடுவதென அந்தப் பிராம்மணன் வேறு ஊர் சென்று பொருள் தேட வழிதேடினன். அங்கும் சென்று வைஶ்யன் பலவாறாக வைது அடித்து மிரட்டினன். உமக்காகத்தானிங்கு வந்தேன். நீசமான வேலையாவது செய்து பணந்தருகிறேன். கடன் கொடாமல் இறந்தால் மறுபிறவியில் உமக்கு புத்ரனாகப் பிறந்து கடனுக்கு உழைத்து, கடனடைந்தபின் இறக்கவேண்டும் என்று கூறும்பொழுதே கோபங்கொண்ட வைஶ்யன் அந்தணரைக் கத்தியால் வெட்டிக்கொன்றான். அதனால் அவன் பல நரகங்களை அநுபவித்தான். வைஶ்யனது குமாரன் மிகச்சிறந்த தார்மிகன். இஷ்டம் பூர்த்தம் முதலியவைகளைச் செய்வான். ஏழைகளுக்கு தானம் புரிவான். ஒரு ஸமயம் நாரதர் இவனிடம் வந்து பல தர்மங்களைப் பற்றிக் கூறினர். கார்த்திகை மாதம் ஸாளக்ராம தானம் மிகச் சிறந்தது; அதைச் செய் என்றார். இவன் பசு, பூமி, எள், ஸ்வர்ணம் இவைகளை தானம் செய்தான். ஸாளக்ராமத்தால் வயிறு நிரம்புமா? என் அதை மாத்ரம் செய்யவில்லை. ஸாதுக்களின் சொல்லை அவமதித்ததாலும் பல நரகங்களை அநுபவித்து பூமியில் புலி, குரங்கு, காளை, விதவாஸ்த்ரீ முதலியனவாகி முடிவில் ஓர் யாசகனது பெண்ணாகப் பிறந்தான்.

வயது வந்தபோது அவர் பெண்ணை ஒரு சிறந்த வரனுக்களித்தார். விவாஹம் முடிவதற்குள் வரனும் வரனைச் சார்ந்த பந்துக்களும் பெண் வீட்டிலேயே இறந்தனர். யாசகர் திவ்ய த்ருஷ்டியால் ஏன் இப்படி நேர்ந்ததென உணர்ந்து உடனே உத்தம வேதியனை அழைத்து அர்ச்

இத்து ஸாளக்ராம தானம் செய்தார். தூங்கி எழுந்தவர் கள்போல் அனைவரும் எழுந்து ஆச்சர்யமடைந்தனர். அன்றுமுதல் அப்பெண்ணும் அவள் பதியும் விடாமல் கார்த்திகையில் ஸாளக்ராம தானம் செய்து வந்தனர். அப்புண்யத்தால், பெண்ணாக இருந்த வைஸ்ய புத்ரன் பிராம்மண புத்ரனாக ஜனித்தான். பூர்வ ஜன்ம க்ஞானம் உண்டாகி அப்பொழுதும் நாரதர் கூறிய சாளக்ராம தானத்தைச் செய்தான். அதனால் கடன் தரவில்லை என்ற கோபத்தால் பிராம்மணனைக் கொன்று நரகத்திலிருந்த தந்தை வைஸ்யனும் நற்கதியடைந்தான். இத்தகைய மஹிமை வாய்ந்தது ஸாளக்ராம ஶிலா தானம்.

### 13-வது அத்தியாயம்

## வங்கராஜனும் கன்யாதாந மஹிமையும்

வஸிஷ்டர்: கன்யாதானம், துலாஸ்தானம், ஶிஷ்டரான குழந்தைக்கு உபநயனம், வித்யாதானம், வஸ்த்ரதானம், அன்னதானம் இவை ஸகல தானங்களிலும் சிறந்தவை. காயத்ரீ ஜபம் செய்துவிட்டு உடனே செய்யும் தானம் அதிலும் கார்த்திகையில் செய்வது அநந்தமான பயனைத் தரும். கன்யாதானம் உபநயந தானமிவைகளை மாத்ரம் கார்த்திகையில் செய்து மற்ற வைதிக கார்யங்களை அது அதற்கு ஏற்பட்ட காலத்தில் செய்யவேண்டும்.

வங்கதேசத்தில் ஸுவீரனென்றோர் அரசனிருந்தான். அவனைப் போரில் முறியடித்து ஶத்ரு அவனது ராஜ்யத்தை அபஹரித்தான். மனைவியுடன் ஓடிவந்து வனத்தில் வஸித்து வந்தான். ஸுவீரன் முனிவர் போல் கந்தமூலங் களைக் கொண்டு வயிறு வளர்த்தான். தெய்வச்செயலாக அவர்களுக்கு ஓர் கன்யகை பிறந்தது. அது வளர்ந்து வரும் காலத்தில் ஒரு ரிஷிகுமாரன் அழகான அந்த கன் யகையைத் தனக்களிக்கும்படி கேட்டான் மன்னனை. ஓ ரிஷி புத்ர! ராஜ்யத்தை இழந்து பரம ஏழையாகி பொருள்

ஸம்பாதிக்க வழி தெரியாமல் தவிக்கிறேன். கஷ்டப்படா மல் வாழ்வதற்கேற்ற தநம் தருவீரானல் உமக்கு கன்ய கையைத் தருகிறேன் என்றான். ரிஷி குமாரன் தபோ பலத் தால் பொருள் நிறையத்தேடி அரசனுக்களித்து ராஜகுமா ரியை மணந்தான். ஸுவீரன் கன்யா த்ரவ்யத்தைக் கொண்டு வயிறு வளர்த்தான். கன்யை பொருளைக் கொண்டு வாழ்வது மிக பாபம்.

அரசனுக்கு இரண்டாவது கன்யகை பிறந்தது. முன் போல் நிறையப் பொருள் தருபவருக்கு கன்யகையை அளித்து அதிக ஸுகமாக வாழலாமென ஸந்தோஷம் அடைந்தான். ஆனால் இவனது ஆயுள் முடிந்தது. யம லோகஞ்சென்று கன்யா தனத்தால் ஜீவித்த பாபத்தால் பல நரகங்களில் வீழ்ந்து துன்பப்பட்டான். ஐயோ! கௌண்டின்ய முனிவர் கூறியதை யான் கேட்கவில்லையே! கார்த்திகையில் கன்யா தானம் செய். அவளது தனத் தால் ஜீவிப்பது பாபம் என்றாரே! எனது போதாத காலத்தால் அதைக் கேளாததுடன் புண்யமாவது பாப மாவது! சுகமாக வாழ்வதன்றோ புண்யம்! ஸுவர்க்கம் என்றேனே, என்னை யார் எப்பொழுது எப்படி நரகத்தி லிருந்து விடுவிப்பர்? என கதறிக் கொண்டிருந்தான் ஸுவீரன்.

இதனிடையில் ஸுவீரனது பித்ருக்களும் ஸ்வர்க்கத் திலிருந்து நரகத்தில் தள்ளப்பட்டனர். இதில் ஶ்ருதகீர்த்தி எனும் அரசன் தைர்யமாக யமதர்மனை வினவினார். ஒரு பாபமும் செய்யாத நான் ஏன் நரகம் செல்கிறேன்? உனது வம்ஶத்தில் பிறந்த ஸுவீரன் கன்யா தனத்தைக் கொண்டு வாழ்ந்தான். அந்த பாபத்தால் நீங்களும் நர கம் செல்கிறீர்கள் என்றார் யம தர்மன். இதை அகற்ற வழியில்லையா? என ராஜா கேட்க, உன்னை இந்த சரீரத் துடன் ஸுவீரனது மனைவியும் மகளும் இருப்பிடம் அனுப்பு

கிறேன். அந்த கன்யகையை கார்த்திகை சுக்ல பக்ஷத்தில், தாநம் செய். அந்தப் புண்யத்தால் ஸுவீரனும் அவனது பித்ருக்களும் ஸ்வர்க்கம் செல்வர் என்றார். அத்தகைய மஹிமையுள்ளது கார்த்திகையில் கன்யா தாநம் செய்வது.

## 14-வது அத்தியாயம்

## செய்யவேண்டியவைகள்

கார்த்திகை பௌர்ணமியன்று பித்ருக்களின் திருப்திக்காக விருஷோத்ஸர்க்கம் செய்வது கோடி கயா ஶ்ராத்தத்திற்கு ஸமம். பித்ருக்கள் நமது வம்சத்தில் ஒருவன் விதிப்படி கார்த்திகை பௌர்ணமியில் விருஷோத்ஸர்க்கம் செய்வானா? என ப்ரார்த்திக்கின்றனர். (காளைக் கன்றுக்கு சூலம் முதலிய அடையாளம் அமைத்து "உனிஷ்டப்படி ஸஞ்சாரம் செய் விருஷபராஜனே" என்று கூறி விடுவதாம். அதை வண்டியில் கட்டவோ ஏர் உழவோ எவரும் பயன்படுத்தக் கூடாது. ஒருவர் இறந்த 11-வது நாள் இது செய்யப்படுகிறது.)

ஸகல தர்மங்களிலும் சிறந்த புண்யமளிக்கும் கர்மா இது. தேவரிஷி பித்ரு கடன்களெல்லாம் இதனாலே அகலும். இம்மாதம் தக்ஷிணை தாம்பூலத்துடன் நெல்லிக்கனி தாநம் செய்வோர் சக்ரவர்த்தியாவர். பௌர்ணமியில் தீபதாநம் செய்தால் வாக், மநஸ், உடல் இவைகளால் செய்த ஸகல பாபங்களும் நீங்கும். ஶிவ சன்னதியில் ஶிவலிங்க தாநம் செய்வது மிக உத்தமமாம். அதை அலக்ஷ்யம் செய்து மற்ற தாநம் செய்கிறேனென்றால் பாபம் நீங்காது. வஜ்ரம் போல் ஒட்டிக்கொள்ளும். கார்த்திகை விரதம் மிக துர்லபமானது. அதை அநுஷ்டிப்போர் பிறர் வீட்டன்னம், பித்ருஶேஷான்னம், நிஷித்தமான காய்கள் ஶ்ராத்தான்னம் திலதானம் வாங்குவது என்பவைகளை விடவேண்டும். பெரிய ஸமாராதனை விருஷான்னம், பிறருக்காக பல ஆண்டு ஆலய பூஜை செய்பவரன்னம்,

பூஜை வைச்வதேவமில்லாத அன்னம் நித்ய கர்மாவை விட்டவரன்னம் விதவைகளுக்குச் சொந்தமான அன்ன மிவைகளையும் சாப்பிடக்கூடாது.

அமாவாஸ்யை பௌர்ணமி ச்ராத்ததினம், ஞாயிற் றுக்கிழமை கிரஹணம் கார்த்திகை மாதம் இவைகளில் இரவில் சாப்பிடக்கூடாது. ஏகாதசியில் இருவேளைகளி லும் தசமி த்வாதசிகளில் இரவு வேளைகளிலும் சாப்பிடக் கூடாது. நிஷித்த காலத்தில் (விசேஷமாக கார்த்திகை மாதத்தில்) சாப்பிடுவது மிகக்கொடிய பாபமாகும். கார்த் திகை மாதம் எண்ணை தேய்த்துக் கொள்வது, பகலில் தூங்கு வது, வெண்கல தாளத்தில் உண்பது, காலையில் தூக்கம் வீட்டில் ஸநாநம் இரவில் புஜிப்பது வேதசாஸ்த்ரநிந்தை இவைகளைச் செய்யக் கூடாது. சக்தி உள்ளவர் வென் னீரில் ஸ்நாநம் செய்வது, ஸுராயில் ஸ்நாநம் செய்தது போலாகும். நதி ஸ்நாநம் அல்லது குளம் அல்லது தடா கம் போன்ற கிணறு (நடபாலி) இவைகளில் முன்னம் உள்ளது சிறந்தது. இந்த தீர்த்தங்களில் ஸ்நாநம் செய் யும் பொழுது கங்கே கங்கே என்று கூறி மநதாலும் நினைக்கவேண்டும். காலையில் ஹரிகதா ச்ரவணம்செய்து மாலையில் சூத்தனுக சிவ பூஜை செய்யவேண்டும். அபி ஷேகப் பிரியனை சிவனுக்கு பஞ்சாமிருதம் பழரஸம் தர்ப்பை ஜலம் முதலியவைகளால் அபிஷேகம் செய்ய வேண்டும்.

## ஷோடச உபசார பூஜை

| | | | |
|---|---|---|---|
| விருஷத்வஜாய | நம: | த்யாந ஆவாஹந ஆஸனம் ஸமர்ப்பயாமி | |
| கௌரீப்ரியாய | நம: | பாத்யம் | ,, |
| லோகேச்வராய | நம: | அர்க்யம் | ,, |
| ருத்ராய | நம: | ஆசமநீயம் | ,, |

| | | | |
|---|---|---|---|
| கங்காதராய | நம: | ஸ்நாநம் | ஸமர்ப்பயாமி |
| ஆம்பராய | நம: | வஸ்த்ரம் | ,, |
| ஜகன்னாதாய | நம: | உபவீதம் | ,, |
| கபாலதாரிணே | நம: | கந்தம் | ,, |
| ஈஸ்வராய | நம: | அக்ஷதான் | ,, |
| பூர்ணகுணாத்மநே | நம: | புஷ்பாணி | ,, |
| தாம்ராக்ஷாய | நம: | தூபம் | ,, |
| தேஜோரூபாய | நம: | தீபம் | ,, |
| லோகரக்ஷாய | நம: | நைவேத்யம் | ,, |
| லோகஸாக்ஷிணே | நம: | தாம்பூலம் | ,, |
| பவாய | நம: | பிரதக்ஷிணம் | ,, |
| கபாலிநே | நம: | நமஸ்காரான் | ,, |

இந்த நாமாக்களைக்கூறி கார்த்திகை மாதம் 30 நாட்களும் பூஜைசெய்து ஶிவஸஹஸ்ர நாமமும் செய்யவேண்டும். பூஜைக்குப் பின் அர்க்யமளிக்கவேண்டும்.

## (மந்த்ரம்)

பார்வதீ காந்த தேவேஶ யத்மஜார்சாங்க்ரி பங்கஜ!
அர்க்யம் க்ருஹாண தைத்யாரே தத்தஞ்சேதமுமாபதே||

ஶக்திக்கேற்றபடி கோவிலில் தீபாலங்காரம் செய்து பிராம்மணர்களுக்கும் தீபதாநம் செய்யவேண்டும். இப்படி 30 நாளும் செய்வோர் ஸோமயாகவாஜபேய அஶ்வமேதம் முதலிய யாகங்களை ஆயிரக்கணக்காக செய்த புண்யத்தைப் பெறுவர். கார்த்திகையில் பகல் உபவாஸமிருந்து இரவு பூஜை செய்வது ஸகல பாபங்களையும் அடியோடகற்றுமென நாரதாதி முனிவர் கூறுகின்றனர்.

சதுர்தசியன்று திலதர்ப்பணம் செய்து ஒரு பிராம்மணனுக்கு அன்னமளித்தால் பித்ருக்கள் பேரானந்தம் அடைகின்றனர். அவரது ஸந்ததி மேன் மேலும் விருத்தியாகும். ஶிவ பூஜை செய்வோர் கைலாஸம் செல்வர்.

இந்த அத்தியாயத்தைப் படித்தாலே பாபமகலும். இதை அலட்சியம் செய்து அனுஷ்டிக்காதவர் பல மிருக ஜன்மங்களைப் பெறுவர். பிறர் ஏற்றிய தீபத்தை நொந்திப் பிரகாசமாக்கினாலும் மிகப் புண்யமாம். த்வாதசியில் செய்யும் புண்யம் அளவு கடந்த பலனைத் தரும்.

15-வது அத்தியாயம்

## எலிக்கும் நற்கதி

கோயிலில் தீபமேற்றி பக்தியால் பகவானெதிரில் நர்த்தனம் செய்வதும் த்வாதசியில் விஷ்ணு ஆலயத்தில் தீப வரிசை அமைப்பதும் வைகுண்ட பலனைத் தரும். ஆலயஞ்சென்று ப்ரதக்ஷிணம் செய்வது ஒவ்வொரு அடியிலும் அச்வமேத பலனையளிக்கும். கார்த்திகையில் விஷ்ணு ஆலயம் செல்லாதவர் இங்கும் நரகத்திலும் துன்பமடைவர். பகவான் ஸன்னிதியில் லக்ஷதீபம் ஏற்றுபவர் புண்யம் வர்ணிக்க முடியாது. முப்பது நாட்களும் தீபமேற்ற சக்தியில்லாதவர் த்வாதசி, சதுர்தசி, பௌர்ணமி மூன்று நாட்கள் ஏற்றினாலும் புண்யமே.

## தீபத்தை நொந்திய பலன்

அணையும் சமயத்திலுள்ள தீபத்தை நொந்தி எரியச் செய்தாலும் மிக்க புண்யமுண்டு. ஸரஸ்வதீ நதிக்கரையில் ஒரு விஷ்ணு ஆலயம் நீண்டகாலமாக ஜீர்ணமாக இருந்தது. கர்ம நிஷ்டர் என்ற யோகி, நதியில் ஸ்நானம் செய்து ஜீர்ணாலயத்தில் புகுந்தார். அது யோகம் புரிய ஏகாந்தமான இடமென யோசித்து அருகிலுள்ள கிராமத்திற்குச்சென்று பன்னிரண்டு தீபங்களை யாசித்துவந்தார். அதனருகே அமர்ந்து பகவத்யானம் செய்வார். ஆங்கு ஓர் எலி வந்து அவர் நிஷ்டையிலிருக்கும் போது எண்ணெயைச் சாப்பிடும். ஒருநாள் எண்ணெய் இல்லா தீபத்தில் உள்ள திரி அதன் காலில் மாட்டிக்கொள்ள அது

றற்றோர் தீபத்தினருகே சென்று எண்ணெய் குடித்தது. அந்த தீபம் மங்கி இருக்க இதன் காலிலுள்ள திரி அந்தத் திரிமேல் பட்டு இரண்டு திரிகளும் சேர்ந்து பிரகாஶமாக எரிந்தன. அந்த எலி ஒருநாளங்கே இறந்தது. அதனுடலிலிருந்து ஒரு திவ்ய புருஷன் தோன்றி கர்ம நிஷ்டரை வணங்கித் துதித்தான்.

அவர் நீ யார் என்று கேட்க நானிங்குள்ள எண்ணெய்யைப் புஜித்த எலி. நான் இறந்தவுடன் இந்த திவ்ய ஶரீரம் கிடைத்தது. தாங்கள்தான் அதன் காரணத்தைக் கண்டறிந்து கூறவேண்டுமென்றான். உடனே கர்ம நிஷ்டர் க்ஞானத்ருஷ்டியாலதை உணர்ந்து அவனது முற்பிறவியையும் கூறினார். நீ ஒரு ப்ராம்மணனை ஜைமினி கோத்ரத்தில் பிறந்தவனாய் பால்ஹிகன் என்ற பெயருடனிருந்தாய். நித்யம் ஶ்ராத்தம் சாப்பிடுவதும் நிஷித்த திநத்தில் சாப்பிடுவது, பூதங்களுக்கும், காக்கைக்கும் போட்ட அன்னத்தை உண்பது, வேதோக்த கர்மாக்களைச் செய்யாததுடன் அதையும் வைதிகரையும் நிந்திப்பது பரிஹாஸம் செய்வது, முதலிய கார்யங்களைச் செய்தாய். அழகிய மனைவியை வீட்டுவேலை செய்யக் கூடாதென ஒரு நீச்ச ஸ்த்ரீயை வேலைக்கமர்த்தினாய். அவளிடம் சுகம் அனுபவித்து அவள் சாப்பிட்ட மிகுதியை புஜித்தாய். உனது கன்யகையை ஒரு நீச்சரிடம் விற்றாய். பால், தயிர் விற்பனைசெய்து நிறையப் பணம் தேடினாய். தேடிய பொருளை பூமியில் புதைத்துவிட்டு இறந்தாய்: பல நரகங்களை அனுபவித்து எலியாகப் பிறந்தாய். தேவ த்ரவ்யத்தைத் திருடிய பாப வாஸனையால் விஷ்ணு ஆலய தீப எண்ணெயை புஜித்து வந்தாய். கார்த்திகை மாதத்தில் உன்னை அறியாமலேயே ஒரு தீபத்தை பிரகாஶப்படுத்தினாய். அந்த புண்யத்தால் கருணாமூர்த்தியான பகவான் உனக்கு வைகுண்டம் அளிக்கிறார் என்றார்.

16 -வது அத்தியாயம்

## ஸ்தம்ப தீப பலன்

கார்த்திகை முப்பது நாட்களிலும் தாம்பூலதாநம் நித்யம் ஓர் தீபதாநம் செய்பவர் செல்வத்தையும் ஸத் ஸந்ததியையும் அடைவர். ஸந்தாந அபேக்ஷையுள்ளவர் நித்யம் ஒரு தேங்காயை தாம்பூல தக்ஷிணையுடன் அளிக்க வேண்டும். ஆலயத்தின் எதிரில் ஸ்தம்பம் நட்டு அதன் மீது தீபமேற்றுவது உயர்ந்த புண்யம். கார்த்திகை பௌர்ணமியில் ஸ்தம்ப தீபதாநம் செய்வதும் அதை தர்சிப்பதும் மஹா புண்யம். நெல், எள் இவைகளுடன் ஸ்தம்ப தீபமேற்றவேண்டும். ஸ்தம்பம் மரத்தாலோ கல்லாலோ அமைக்கலாம்.

புண்யமான மதங்காச்ரமத்தில் மஹர்ஷி மதங்கர் கார்த்திகை புராணம் படித்து ஆங்குள்ள விஷ்ணு ஆல யத்தில் தானும் ஸ்தம்ப தீபமேற்றி அனைவரையும் செய் யச் சொன்னார். ஒருநாள் உலர்ந்த கட்டைமீது ஏற்றிய தீபம் கட்டையுடன் பூமியில் வீழ்ந்தது. பயங்கர சப்தத் துடன் அந்த மரம் முறிந்ததைக் கண்டு முனிவர் அஞ்சி ஓடினர். அந்த மரத்திலிருந்து ஒரு திவ்ய புருஷன் தோன்ற ஆச்சர்யத்துடன் அனைவரும் அவரருகே சென்று நீ யார்? என வினவினர்.

முனிவர்களே! யான் பிராம்மணன். ஆனால் செல்வம் மிகுந்து ஒரு அரசனானேன். வேதியருக்கேற்ற ஒரு கர்மா வும் செய்தறியேன். ராஜாபோல் நால்வகை ஸேனைகளை வைத்துக்கொண்டு பல போகங்களை அனுபவித்தேன். தீர்த்த யாத்ரை யாகம், தாநம் ஒன்றும் செய்தவனல்ல. எப்போதும் உயர்ந்த ஆஸனத்திலிருப்பேன். பல வைதிகர் யாசகத்திற்காக என்னிடம் வருவர். அவர்களுக்கெதிரில் நீட்டிய காலை மடக்க மாட்டேன். முறைப்படி எழுந்து வணங்கி வரவேற்கமாட்டேன். உங்களிடமிருந்து சிறிது

தனம் வாங்கினால் அது அக்ஷய்யமாக வளரும் என்று கூறி உங்கள் தனத்தையும், என் பொருளையும் சேர்த்தளிக்கிறேன் என்று கூறி ஏமாற்றினேன். இறந்தபின் இந்தப் பாப பலனாக பல நரகங்களை அனுபவித்து நாயாகவும், காக்கையாகவும், செடி, கொடிகளாகவும், ஒன்றாகவும் புழுவாகவும் பல பிறவிகளைப் பெற்றேன். எந்த புண்யத்தால் எனக்கு இந்த பாக்யம் கிடைத்ததென் நீங்கள்தான் கூறவேண்டுமென்றான்.

இதைக்கேட்ட முனிவர்கள் கார்த்திகை பௌர்ணமியில் அசேதனமாயினும் புராண ஸ்ரவணம் தீபம் சுமந்தது இந்தப் புண்யத்தால்தான் பட்டுப்போன கட்டையாக இருந்த இவருக்கு நல்ல கதியெனப் பேசிக் கொண்டனர். அவர்களைப்பணிந்து அந்தப் புருஷன் நான் மேல்லோகஞ் சென்றால் உங்களது உபதேசம் கிடைக்காது. ஆதலால் இப்பொழுதே கூறுங்கள். மனிதருக்கு ஜனன மரண ஸம்ஸாரபந்தம் எதனால் உண்டாகிறது? எதனால் அதிலிருந்து விடுபடுவான்? எப்படி மோக்ஷம் கிடைக்கும்? என்று கேட்டான். ரிஷிகள் ஆங்கீரஸ முனிவரை இவைகளுக்கு பதில் கூறும்படி சொன்னார்கள்.

17, 18-வது அத்தியாயங்கள்

## தத்வோபதேசம்

ஆங்கீரஸர்:- பார்வதிக்கு பரமசிவன் கூறியதைக் கேள். இதைக் கேட்கின்ற நீயும் பதில் கூறும் நானும் எங்குமுள்ள பரமாத்ம ஸ்வரூபமாகும். அதை அறியாததால் நீ நான் என்று தேஹத்திலுள்ள ஜீவன் பேசுகிறான். நானே பிரும்மமாக இருக்கிறேன் என்ற (உபாஸனை) க்ஞானம் வந்தபின் ஆநந்தமயமான ஆத்மாவாகி விடுகிறான் ஜீவன். அந்த ஜீவத்தன்மை அகன்று அகண்டமான ஆத்மஸ்வரூபத்தில் இரண்டற ஒன்றாகக் கலப்பதே முக்தி. ஆத்மா ஸத்யாநந்த ஸ்வரூபி. புத்தி ஸாக்ஷி. நான் ஆத்மா அல்ல. உடல் நானல்ல. பஞ்ச பூதங்களான உடலும் இந்திரியங்களும் நானல்ல. இந்த

உடலுக்குள்ளிருந்து இந்திரியங்களைத் தூண்டுபவர் ஆத்மா. அது பிறப்பு இறப்பு இல்லாத நித்ய வஸ்து விழித்திருத்தல் தூங்குதல் கனவு காண்பது ஆகிய காலங்களில் ஸாக்ஷியாக இருக்கும் ஆத்மா நான். வீட்டை விளக்கும் தீபம் வீட்டைவிட வேறல்லவா? அதே போல் நம்முடல் புலன் முதலியவைகளை விளக்கும் ஆத்மா வேறு. அவரே நான். புத்ரமித்ராதிகளிடமுள்ள அன்பை விட நமக்கு நம்மிடமதிக அன்பிருக்கின்றதல்லவா? அந்த ஆத்மாவே நான் என உபாஸி.

உடல் உண்டாகும் வளரும் இருக்கும் மாறும் குறையும் இறக்கும். ஆத்மா ஒரு மாறுதலுமின்றி இருக்கும். ஆத்மா கண்ணுக்கும் சொல்லுக்கும் புலப்படாது. உலகிலுள்ள உடலிலுள்ள வஸ்துக்கள் அழிவதால் இதல்ல ஆத்மா இதல்ல ஆத்மா என்று விலக்கித்தள்ளி கடைசியில் எது இருக்கிறதோ அதே ஆத்மா அதனிடமிருந்தே ஸகல வஸ்துக்களும் உண்டானதால் அதை அறிந்தால் எல்லாமறிந்ததாகும். நிர்குணமாயினும் மாயையின் ஸஹாயத்தால் உலகைப் படைத்து ஜடமான அதில் சைதன்யமான ஆத்மா புகுந்தது. ஒரே வஸ்துதான் ஒவ்வொன்றிலும் இருக்கிறது. அந்த வஸ்துவை விட்டு அதனுள்ளிருப்பதைத் மாத்ரம் கவனித்தால் அது ஆத்மா என அறியலாம். மஹா வாக்யமெனும் தத்துவம் அஸி என்ற உபநிஷத் இதைக் கூறுகிறது. தத் எனில் அந்த ஆத்மா. த்வம் எனில் உன்னிடமுள்ள ஜீவன். அவ்விரண்டிலும் முள்ள சைதன்யத்தை மாத்ரம் கவனித்தால் அதே அத்வைதமாகும்.

அந்த க்ஞானமுண்டாவதற்கு ஸ்வகர்மாவை பலனைக் கோராமல் ஈச்வரார்ப்பணமாக செய்துகொண்டே ஸத்குருவை அடுத்து வேதாந்த ச்ரவண மநநாதிகளைச் செய்ய வேண்டும். க்ஞானம் வந்தபின் ஜநந மரணாதி ஸம்ஸாரமில்லை. ஒரே ஆநந்தமயமாவாய்.

பாபியான தனக்கும் கார்த்திகைப் புண்யத்தால் உங்கள் உபதேசமும் கிடைத்தது. கர்ம ஸ்வரூபத்தைச் சிறிது விளக்கிக் கூறவேண்டுமென அந்தப் புருஷன் கேட்க ஆங்கிரஸர் கூறுகிறார்.

அநாதியான அவித்யையால் ஜீவன் அழியக் கூடிய உடலை நான் என எண்ணி ஸுகதுக்கங்களை அனுபவிக்கிறான். அந்த எண்ணம் அகலவே ஸ்வதர்மமெனும் கர்மாவை ஈச்வர ப்ரீதிக்காகச் செய்யவேண்டும். செல்வம் ஸந்தாநம் முதலிய பலன்களில் ஆசைவைத்தால் மறுபடியும் சரீரமுண்டாகும். ஆதலால் பக்தியுடன் வர்ணாச்ரம தர்மத்தை அநுஷ்டிக்கவேண்டும்.

ப்ராதஸ்நாநம் செய்யாமல் மற்ற கர்மாக்களைச் செய்தால் யானை விழுங்கிய விளாம்பழம்போல் பயன் அற்றதாகும். நித்யம் ப்ராதஸ்நாநம் செய்ய ശக்தி இல்லாதவர் துலா மாதம், கார்த்திகை மாதம், மார்கழி மாதம், வைகாசி மாதம் இவைகளிலாவது பிராதஸ்நாநம் செய்ய வேண்டும். சாதுர்மாஸ்யம் மாஸஸங்க்ரமணம் சந்த்ர ஸூர்ய க்ரஹணம் ஏகாதசி, த்வாதசி முதலிய புண்ய காலங்களிலும் ஸ்நாநம் அவசியம். இப்பொழுது செய்யும் கர்மாக்களுக்கு பலன் காலாந்தரத்தில் தான் உண்டாகும். ஸ்நாநம் ஸந்த்யா ஜபம் ஹோமம் ஸூர்ய நமஸ்காரம் இவைகளை நித்யம் செய்யவேண்டும். கங்கைக்கு ஸமமான தீர்த்தம், வேதத்திற்கு ஸமமான சாஸ்த்ரம், பிராம்மண ஜாதிக்கு ஸமமான குலம், பார்யைக்கு ஸமமான ஸுகம், தர்மத்திற்கு ஸமமான மித்ரன், ஜோதிஷத்திற்கு ஸமமான கண், கார்த்திகைக்கு ஸமமான மாஸம் வேறில்லை.

## சாதுர்மாஸ்ய மென்பதென்ன?

ஆஷாட சுக்லபக்ஷ தசமியன்று பகவான் பாற்கடலில் படுப்பது என்ற வ்யாஜமாக ஸ்ரீதேவியுடன் ஏகாந்தமாக இருக்கிறார். கார்த்திகை ஸுக்ல த்வாதசியன்று (ப்ர

போதிநீ த்வாதசி) எழுந்திருக்கிறார். இதே சாதுர்மாஸ்யம். இச்சமயம் பகவத்யானம், பூஜை, தானம் முதலியவைகளைச் செய்தால் அது அக்ஷய்யமான பலனைத் தரும். பகவான் முனிவர்களுக்குக் கருணையுடன் சாதுர்மாஸ்ய விரதத்தைக் கூறி அச்சமயம் செய்பவை அக்ஷய்யமான பலனைத் தருமென அருள்புரிந்தார். ஒரு கிருதயுகத்தில் நாரதரிஷி வைகுண்டஞ் சென்று பகவானை வணங்கித் துதித்தார். அவரை யோகக்ஷேமம் விசாரித்து, வேத விதிப்படி லோக க்ஷேமத்திற்காகவும் ஆத்ம க்ஷேமத்திற்காகவும், மானவர் ஸ்வதர்மத்தைச் செய்து வருகிறார்களா? என அறியாதவர்போல் ஸர்வக்ஞரான பகவான் வினவினார். பகவன்! தாங்கள் அறியாததுண்டோ? சில ரிஷிகளும் ஸாமன்ய மனிதருடன் கூடி வேதோக்த கர்மாக்களை விட்டுவிட்டனர். புஜிக்கத் தகாததைப் புஜித்து விரதங்களைக் கைவிட்டனர். சிலர் ஆசாரத்துடன் அஹங்காரமின்றி ஸன்மார்க்கத்திலீடுபட்டிருக்கின்றனர். சிலரோ வேத கர்மாவையும் அதை அனுஷ்டிப்போரையும் நிந்திக்கின்றனர். பிரபோ! தாங்கள் அவர்களை உபாயத்தால் சிக்ஷித்து நல்வழிக்குக் கொண்டுவர பாலகரான நீர்தான் ஶக்தியுள்ளவர் என்றார் நாரதர்.

இதைக்கேட்ட பகவான், லக்ஷ்மீதேவியுடன் கருடன் மீதேறி பூலோகஞ் சென்றார். புண்ய அரண்யம் நதிதீரம் க்ஷேத்ர தபோவனம் முதலிய இடங்களுக்குச் சென்றார். பகவான் மாயா நாடக ஸூத்ரதாரி. ஆதலால் கிழப்பிராம்மண உருவத்துடன் ஆங்காங்கு ஸஞ்சரித்தார். சிலர் அவரை வரவேற்று வணங்கி விருந்தளித்தனர். சிலர் கர்வத்துடன் வந்தவரைத் திரும்பிக் கூட பாராமலிருந்தனர். சிலர் கர்மாக்களை நன்கு செய்தனர். சிலர் ஏகாதசியில் சாப்பிட்டுக்கொண்டிருந்தனர், சிலர் ஆசாரத்துடன் இருந்தனர். சிலர் சோம்பேறிகளாக இருந்தனர். இதைக்கண்ட பகவான் என்ன செய்வதென யோசனை செய்தார்.

மஹர்ஷிகளுக்குப் பிரியமானதும் ரிஷி மண்டலம் நிறைந்ததும் மிகப் புண்யமானதுமாயுள்ள நைமிசாரண்யத்திற்குச் சென்று தனது நிஜ உருவைக் காண்பித்தார். சங்க சக்ர கதாபாணியாம் பீதாம்பரதாரியாய் லக்ஷ்மீ ஸமேதனாக பார்ஷத கணங்களுடன் பகவானிருப்பதைக் கண்டு மஹர்ஷிகள் ஆச்சர்யமடைந்து சிஷ்யவர்க்கத்துடன் ஓடோடி வந்து விழுந்து எழுந்து போற்றிப் புகழ்ந்தனர். இவர்களில் முக்யமானவர் க்ஞானஸித்தர் என்பவர்.

## 19-வது அத்தியாயம்

## ரிஷிகள் கூறிய ஸ்துதி

க்ஞானஸித்தர்:- ப்ரபோ! தாங்கள் வேதத்தால் அறியத்தக்கவர், ரஹஸ்யமானவர். ஸகல தேவர்களாலும் பூஜிக்கத்தக்கவர். பிறவிக்கடலைத் தாண்டி வைப்பவர். ஸகல சராசரமானவர் நீரே! சிவனாலும் ஸகல உலகினராலும் நமஸ்கரிக்கத் தக்கவர். ஸம்ஸாரக் கடலிலிருந்து கரையேற்றும் உமக்கு நமஸ்காரம் கஜேந்த்ரன், த்ருவன், ப்ரஹ்லாதன் முதலியவர்களைக் காத்தருளிய உமக்கு நமஸ்காரம்.

கேசவாய நமஸ்தேஸ்து நமோ நாராயணாய ச|
கோவிந்தாய நமஸ்தேஸ்து விஷ்ணவே ஜிஷ்ணவே நம||
நமஸ்தே பத்மநாபாய நமோ தாமோதராய ச|
ஸங்கர்ஷண நமஸ்துப்யம் பாஹியஸ்மான் கருணாநிதே||

எனத் துதித்து, கோவிந்தா! உமது பாதாரவிந்தத்தைத் தவிர வேறு வரம் வேண்டாம் என்றார். இதைக் கேட்ட பகவான், மஹர்ஷே! அப்படியே ஆகட்டும். மற்றொரு வரம் தருகிறேன் எல்லோருக்கும். ஆசாராதிகளை விட்டவர்க்கும் கூட உபகாரமாக சாதுர்மாஸ்ய விரதத்தைக் கூறுகிறேன். ஆஷாட சுக்லதசமியில் யான் படுத்துறங்கி கார்த்திகை சுக்ல த்வாதசியில் எழுந்திருக்கிறேன். அந்த

புண்ய காலத்தில் பூஜ்ஜ தாந தர்மம் செய்பவர்கள், கர்மாக்களை விட்ட பாபத்திலிருந்து விடுபடுவர். அக்ஷய்யமான பலனையுந்தருமது. கருணையுடன் இரங்கி இவ்வளவு ஸுலபமான விருதத்தைக் கூறினேன். இதையும் செய்யாதவர் பிரும்மஹத்தி தோஷத்திற்கு ஆளாவர். உலகில் என்னிடம் பக்தி செலுத்துவதாகக் கூறி, ஸத்கர்மங்களை விட்டவரின் பக்தியைப் பரீக்ஷிக்கவே தூங்குவதுபோல் பாவனை செய்கிறேன். எனது ஸ்தோத்ரத்தைப் படிப்பவர் மூன்று கரணங்களாலும் செய்த கொடிய பாபத்திலிருந்தும் விடுபடுவர் என்று கூறி பகவான் ஸ்ரீதேவியுடன் வைகுண்டம் சென்றார். அத்தகைய புண்ய சாதுர்மாஸ்ய விரதத்தைச் செய்து க்ஞாநஸித்தாதி முனிவர் வைகுண்டம் சென்றனர்.

## 20-வது அத்தியாயம்

## புரஞ்ஜய சரிதம்

வஸிஷ்டர்:- அத்ரிமுநிவர் அகஸ்த்யருக்குக் கூறிய கார்த்திகை மஹிமையைக் கேள்:— கார்த்திகைக்கு ஸமமான மாதமில்லை. வேதத்திற் சிறந்த சாஸ்த்ர மில்லை. ஆரோக்யத்திற்கு ஸமமான இன்பமில்லை. கேசவனுக்கு ஸமமான தேவனில்லை. கார்த்திகை ஸ்நாந தீப தாநாதி விரதத்தால் செல்வம் க்ஞாநம் யஶஸ் முதலியவைகளைக் கலியில் விரைவில் அடையலாம்.

அயோத்யையில் ஸூர்ய வம்ஶத்தில் புரஞ்ஜயன் என்ற வேந்தனிருந்தான். அபரிமிதமான செல்வம் உண்டு. ஆனால் தாநம் செய்யமாட்டான். ஸகல வித்யைகளையும் கற்றவன். ஆனால் அநுஷ்டாந மில்லாதவன். ஸத்யம் ஶௌசம் ஆசாரமில்லாதவன். ஸ்வர்ண ஸ்தேயம் முதலிய பாபம் செய்வோரிடம் அன்புள்ளவன். தேவ பிராம்மணர் பொருள்களையபகரித்தான். இத் தீயச் செயலை யறிந்த காம்போஜராஜன் குருராஜன் முதலிய

சிற்றரசர்கள் திடீரென் நால்வகைச் சேனையுடன் புரஞ்ஜயனை எதிர்த்தனர். நாலுபுறமும் சூழ்ந்துகொண்ட பகைவரை எதிர்க்கப் புரஞ்ஜயன் தனது ஸேனைகளுடன் புறப்பட்டான்.

21-வது அத்தியாயம்

## புரஞ்ஜயன் தோல்வி

இவனது ஸேனையும், சிற்றரசர் ஸேனையும் கைகலந்து கடும்போர் நிகழ்த்தினார்கள். குதிரை குதிரையுடனும், யானை யானையுடனும், ரதம் ரதத்துடனும், பதாதி பதாதியுடனும் சேர்ந்து யுத்தம் செய்தனர். காம்போஜ ராஜன் வில்லேந்தி புரஞ்ஜயனை மரங்களால் தாக்கினான். இவனது கொடி, குதிரை, தேர் முதலியவைகளைத் தாக்கி முறித்துத் தள்ளினான். புரஞ்ஜயனுடைய பாணங்கள் காம்போஜ ராஜனின் உடலில் புகுந்து அவனைக் கீழே தள்ளின. அவன் மூர்ச்சை தெளிந்து எழுந்து புரஞ்ஜயனை அடித்து அவனது சேனைகளில் தேர், யானை, குதிரை முதலியவைகளை அடித்து நாசம் செய்தான். இரு சேனைகளிலும் உக்கிரமாகப் போர் நடந்தது. பலர் உயிர் இழந்தனர். இரத்த ஆறு ஓடிற்று. பிணக்குவியல் குவிந்தது. புரஞ்ஜயன் தோல்வி அடைந்து மறைந்து ஒளிந்தான். காம்போஜன் பதிமூன்று அக்ஷௌஹிணி ஸேனையுடன் நகரத்தைச் சூழ்ந்தான். ஸுசீலன் என்ற புரோகிதன் புரஞ்ஜயனை நோக்கி, உனக்கு வெற்றி வேண்டுமானால் இந்த கார்த்திகை மாதம் பௌர்ணமியில் புஷ்பங்களால் கேசவனைப் பூஜித்து, அவன் ஆலயத்தில் தீபதானம் செய். கிருஷ்ணா! கோவிந்தா! என்று பகவானது சன்னதியில் பக்தி பரவசனாகி ஸ்தோத்திரம் செய். கருணா மூர்த்தியான பகவான் தனது சக்ரத்தை அனுப்பி, அம்பரீஷன் முதலியவர்களைக் காத்தது போல் எந்த வகையிலாவது உன்னைக் காப்பாற்றுவார்! அவருக்கு வேதியரைப் பூஜிப்பதும், வேதம் கூறிய தர்மத்தைச் செய்வதும் மிகப் பிரியமானதாம்! என்று கூறினார்.

புரஞ்ஜயன் அங்ஙனமே வேதியர்களைக் கொண்டு வேத விதிப்படி பகவானைப் பூஜித்து, தான தர்மங்களைச் செய்து, பலமுறை பணிந்து, பக்தி பரவசனாகித் துதித்தான். அந்த அருளால் புரஞ்ஜயனது சேனையிலுள்ளோர் உற்சாகத்துடன், பகைவனைக் கொல்வோம்! எனக்கூற, அரசனும் போருக்குக் கிளம்பினான்.

22-வது அத்தியாயம்

## புரஞ்ஜயன் வெற்றி

புரஞ்ஜயன் கழுத்தில் துளசி மாலையும், நாவில் பகவன் நாமாவும், மனதில் மாதவ பக்தியும் கைக்கொண்டு தைர்யத்துடன் பகைவர்களிடம் வந்து வீரவாதம் செய்தான். காம்போஜன் முதலியவர் இவன் தெய்வ பலத்துடன் வருகிறான் என்பதை உணராமல் போரிட்டனர். முடிவில் அனைவரும் தோல்வி அடைந்தனர். யத்தனான புரஞ்ஜயன் வெற்றி கோஷத்துடனும், ஜயலக்ஷ்மியுடனும் ஊருக்குத் திரும்பினான். பகவான் அனுகூலனாக இருந்தால், சத்துரு மித்ரனாவான். அதர்மம் தர்மமாகும் பகவத்பக்தி இல்லாமல் செய்யும் தர்மமும் அதர்மமாகும். மித்ரனும் சத்துரு ஆவான். கார்த்திகை விரதம் ஸர்வ ஆபத்துக்களையும் நீக்கி சுகத்தையும் தரும். விஷ்ணு பக்தர் கிடைப்பதே அரிது. அதிலும் கார்த்திகை விரதம் செய்பவர் மிக அரிது. விஷ்ணு பக்தியும், கார்த்திகை விரதமும் உள்ளவர்களே கலியில் சுத்த வைஷ்ணவர் என தர்மம் அறிந்தோர் கூறுகின்றனர். விஷ்ணு பக்தியுள்ளோர் எவ்வகுப்பைச் சேர்ந்தவர்களாய் இருந்தாலும் அவர்களே வேதியர் ஆவர். விஷ்ணு பக்தி இல்லாதவர் வேதியராயினும் நீசர் ஆவர். வேதமோதி விஷ்ணு பக்தியுடன் கார்த்திகை விரதம் செய்பவர் வைஷ்ணவ ச்ரேஷ்டர் ஆவர். அவரிடம் பகவான் நித்யவாஸம் செய்கிறார். ஸம்ஸார துன்பத்தைப் போக்க விருப்புள்ளவர்

எந்த வகுப்பைச் சார்ந்தவராயினும் பகவானை சரணம் அடைந்தாலும் போதும். உடனே பிறப்பிறப்புக் கடலைக் கடப்பர்.

பராசரர், வஸிஷ்டர் முதலிய மஹரிஷிகளும், அம்பரீஷன், ஸகரன் முதலிய அரசர்களும் விஷ்ணுபக்தியினால் நற்கதி அடைந்தனர். சுதந்திரனாயினும் இல்லாவிடினும் பக்தி செய்பவர் பகவானுக்கு உத்தம பக்தராவர். உலகில் கார்த்திகைக்கு சமமான விரதம் இல்லை. விஷ்ணுவுக்கு சமமான தெய்வமில்லை. ஸூர்யனுக்குச் சமமான தேஜஸ் இல்லை. அச்வத்தத்திற்குச் சமமான மரமில்லை. ஆதலால் ஸர்வோத்தமமான விஷ்ணுவை ஆராதிக்க வேண்டும். ச்ராத்த காலத்தில் கார்த்திகை மாகாத்மியத்தைப் படித்தால் பித்ருக்கள் ஒரு கல்பம் வரை ஸந்தோஷமடைவார்கள்.

23-வது அத்தியாயம்

## ஸ்ரீரங்க ஸேவை, புரஞ்ஜயன் முக்தி

அயோத்தி மாநகரில் புரஞ்ஜயன் இந்திரனைப்போல் பலமுள்ளவனாகவும், சத்தியவாதியாகவும் வசித்து வந்தான். விஷ்ணு பக்தியினால் காமக்ரோதங்களை ஜயித்து, கார்த்திகை விரதத்தை ஒழுங்காக அனுஷ்டித்தான். அதனால் அவனது பாவங்கள் அகன்றன. ஒருநாள் "அவன் பகவானை ஆராதிக்க வேண்டும்! எந்த மாதத்தில்? எங்கே? எப்படி ஆராதிப்பது?" என்று சிந்தை கொண்டிருந்தான். "ஸ்ரீரங்கம் சென்று, காவேரியில் புனலாடி, ஸ்ரீரங்கனை கார்த்திகை விரதத்தால் ஆராதித்து வா" என்று ஓர் அசரீரியான சப்தம் உண்டானது. அரசன் சதுரங்க ஸேனையுடன் பூலோக வைகுண்டமான ஸ்ரீரங்கம் வந்தான். அங்கே விதிப்படி கார்த்திகை மாதத்தில் ஸ்நானம், தானம், ஜபம், அர்ச்சனம் முதலியவைகளைச் செய்து, கார்த்திகை விரதத்தைப் பூர்த்தி செய்தான்.

பிறகு அயோத்திக்குத் திரும்பி வந்தபோது, ஊரெல்லாம் செழித்து, அலங்காரமாகவும், பிரகாசமாகவும் இருக்கக் கண்டான். இத்தகைய பக்தனைக்காண ஞானிகளும், வேத சாஸ்திர முணர்ந்தோரும் வந்து சூழ்ந்தனர். பெண்களெல்லாம் ஸர்வ அலங்கார பூஷிதர்களாய் மகா பதிவ்ரதைகளாய் இருந்தார்கள். குடிகளெல்லாம் அவரவர் தர்மத்தைக் கைவிடாமல் நன்றாக அனுஷ்டித்து வந்தனர்.

அனைவரும் அரசனை வரவேற்றுப் புஷ்பங்களையும் பொரிகளையும் அரசன்மீது வருஷித்தனர். அரசன் மன மகிழ்ந்து குடிகளை மனுநீதி தவறாமல் ஆண்டுவந்தான். வயது வந்தபின் இராஜ்ய பார்த்தைப் புத்திரனிடமளித்து மனைவியுடன் வனவாசம் செய்தான். அங்கும் கார்த்திகை விரதத்தை ஒழுங்காக அனுஷ்டித்து முடிவில் வைகுண்டம் சென்றான். கார்த்திகை விரதம் செய்வதற்கும் மிகச் சுலபமானது. உயர்ந்த பலனையும் தரத்தக்கது. இந்த அத்தியாயத்தைக் கேட்டாலும், படித்தாலும் பாபமகன்று பரமபதம் பெறுவர்.

24, 25-வது அத்தியாயங்கள்

## அம்பரீஷ சரிதம்

அத்ரி முனிவர் கூறுகிறார்:- கார்த்திகை மாதம் ஹரி போதினி அல்லது பலதா என்ற துவாதசி மிகச் சிறந்ததாகும். ஸகல புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வதாலும், ஸர்வ யக்ஞங்களைச் செய்வதாலும் உண்டாகும் பயனைவிட, விஷ்ணு பக்தியுடன் செய்யும் ஏகாதசி துவாதசி விரதமும் அதிகமான பலனைக் கொடுக்கும். சந்த்ர ஸூர்ய கிரஹணங்களைவிட ஏகாதசி நூறுமடங்கு அதிகமானது. அதேபோல் அன்று செய்யும் ஸகல புண்ணியமும் கோடி மடங்கு அதிகமான பலனைக் கொடுப்பது ஹரிபோதினி, துவாதசி. ஆதலால் மற்ற விரதங்களையெல்லாம் விட்டு

ஏகாதசி விரதத்தை அனுஷ்டித்து துவாதசி அன்று காலை விதிப்படி பாரணை செய்து துவாதசி விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். இதை அறிந்த உத்தம பாகவதனான அம்பரீஷன் ஒரு சமயம் ஏகாதசி விரதத்தை அனுஷ்டித்து துவாதசி பாரணை செய்ய ஆரம்பித்தான். அன்று துவாதசி மிக சொல்ப நேரமே இருந்தது. அந்த துவாதசிக்குள் பாரணை செய்தால்தான் புண்ணியம் தோன்றும். ஆதலால் அரசன் பாரணைக்குச் செல்லும்போது முறைப்படி அதிதியைப் பார்க்க வெளியே சென்றான். அச்சமயம் தற்செயலாக தூர்வாஸரென்ற மஹரிஷி வந்தார். அவரை அதிதியாக வரித்து, ஏற்று அருள்புரியும்படியும், மிகச் சொல்பமாக இருக்கும் துவாதசிக்குள் பூஜிக்க வேண்டுமென்றும் வேண்டினான். அவர் அதை ஏற்றுக் கொண்டு அனுஷ்டானம் செய்யச் சென்றார். வெகு நேரமாகியும் அவர் வரவில்லை. துவாதசியோ சென்று விடும்போல் இருக்கின்றது. அதற்குள் பாரணை செய்வது தர்மமாகும். அதிதியை விட்டுவிட்டுப் பாரணை செய்வது அதர்மமாகும். அதிலும் தூர்வாசர் கோபங்கொண்டு சபித்து விடுவர். துவாதசிக்குள் பாரணை செய்யாவிடில் பக்தியை விட்ட பாப முண்டாகும். ஹரிதினத்தில் பாரணை செய்யாவிடில் அதற்கு ப்ராயச் சித்தமே இல்லாத பெரும் பாபமாகும். ப்ராம்மண சாபம் கொடியதா? ஹரி பக்தியை விடுவது கொடிய பாபமா? என்று யோசிக்கும்போது சொல்ப துக்கத்தைத் தரும் ப்ராம்மண சாபத்தைவிட அழியாத துக்கத்தைத் தருவது பக்தித் தியாகம், ப்ராம்மண சாபத்தை நீக்க வல்லவர் மஹாவிஷ்ணு. விஷ்ணுவிற்குச் செய்த அபசாரத்தை நீக்க எவராலும் முடியாதென்று நீண்ட நேரம் யோசித்து. ஒரு முடிவுக்கும் வராமல் வேதசாஸ்திரம் உணர்ந்த வேதியர்களை வினவினான். தர்மம் அறிந்த ஸாதுக்கள் நீண்ட நேரம் விசாரித்தார்கள். ஈஸ்வரனே அக்னி வடிவமாக இருந்து பசியுடன் நாம் அளிக்கும் நால்வகையான அன்னத்தை ப்ராண வாயுவின் ஸகாயத்

தால் புசிக்கிறார். உடலிலுள்ள பகவான் பசி, தாகத்தை உண்டு பண்ணுகிறார். அவரே எல்லோருடைய உடலிலும் இருந்து உணவை ஏற்கிறார். அவரை எல்லோரும் பூஜிக்கிறார்கள். எந்த வகுப்பைச் சார்ந்தவரானாலும் நம் வீட்டிற்கு வந்தவருக்கு அன்னமளித்தே நாம் புசிக்க வேண்டும். அதிலும் நாலு வர்ணங்களுக்கும் முதல்வனான ப்ராம்மணன் புஜிப்பதற்குள் நாம் புஜித்தால் மிகப் பாபமாகும். அதிலும், நாமே அழைத்த ப்ராம்மண அதிதியை விட்டு நாம் சாப்பிட்டால் அந்த அதிதி அவமானத்தால் ஆயுஸ், லக்ஷ்மி, யஶஸ், தர்மம் எல்லாம் அழியும். ப்ராம்மணர்களிடம் சகல தேவதைகளும் தங்கி இருக்கின்றார்கள். ப்ராம்மண அவமானம் எல்லாத் தேவதைகளையும் அவமானம் செய்ததாகும். சாதாரண ப்ராம்மணர்களை அவமதிப்பதே இத்தகையதெனில், தபோராஶியான துர்வாஸரைப் பற்றிக் கூறவும் வேண்டுமா? ஆதலால் அவரை விட்டு துவாதசி பாரணை செய்வது பாவமாகும். நீர் அழைத்துத் துவாதசி போவதற்குள் அவர் வராதது அதர்மமாகும். முற்கூறிய இரண்டும் சமமான பாதகமே. சாஸ்திரப்படி எது பெரிய பாபம்? எது சிறிய பாபம்? என்று சொல்ல முடியாது. நீ பாரணை செய்து விட்டால் துர்வாஸர் உடனே சாபம் அளிப்பார் என்று கூறினர்.

பிராம்மணர்கள், மஹாராஜா! நாங்கள் இருதலைக் கொள்ளியில் சிக்கிய புழுபோல் ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஆதலால் தாங்கள் தங்கள் புத்தியைக் கொண்டு யோசித்து ஒரு முடிவு செய்யுங்கள் என்றனர். அரசன் ஸாதுக்களே! த்வாதசிக்குள் பாரணை செய்வதற்குப் பதிலாகத் தீர்த்தமருந்துகிறேன். அது பாரணை செய்தது போலாகும். விருந்தினரை விட்டுவிட்டுச் சாப்பிட்ட தோஷமும் வராதெனநினைக்கிறேன் என்று கூறி நீரருந்தினான். அந்த க்ஷணத்திலேயே இரு கண்களும் சிவக்க மன்னனைத்

தஹித்துவிடுபவர்போல் பார்த்துக்கொண்டு வந்தார் துர்வாஸர். அம்பரீஷ! என்ன செய்தாய்? அதிதியை விட்டு பாரணை செய்யலாமா? துர்புத்தி கொண்டு சாஸ்த்ர விரோதமான கார்யம் செய்தாய்! ஸ்நானம் செய்யாமல் உண்பது மலத்தைப் புஜிப்பது போலாம். அதிதிக்கு அன்னமிடாமலருந்துவது பாபத்தையே புஜிப்பதாகும். தானே கோரிய அதிதியை விட்டு முன்னே புஜிப்பது மலத்திலுள்ள புழு மலத்தையே புஜிப்பது போலாகும். அதிதிக்காகப் பக்குவம் செய்த அன்னத்தை அவருக்களிக்காமல் புஜித்தால் மிகக் கொடிய பாபத்தை உட்கொள்ளுவதாம். பக்குவமானதோ, ஆகாததோ, பழமோ, பாலோ, நீரோ இவை அன்னத்திற்குப் பிரதிநிதியாகும். அதிதியை அவமதித்தவன் பக்தனு? நான் உனது புரோஹிதன் போல் பூஜிக்கத்தக்கவனல்லவா? மற்ற ஸாமான்யமானவரைப்போல் என்னை அவமதித்தாய். தர்மம் செய்பவன் என ப்ரகாசப்படுத்திக் கொண்டு தர்மத்தை நாஶம் செய்கிருய் என்று கடிந்து விழும் முனிவரைப் பணிந்து அம்பரீஷன் வேண்டினன்.

முனிஶ்ரேஷ்ட! நான் பாபிதான்! தங்களைச் சரணமடைகிறேன், என்னைக் காத்தருளுங்கள். தர்ம மார்க்கம் அறியாமல் பாபச் சேற்றில் மூழ்கிவிட்டேன். ஶாந்தியையே குலதர்மமாகக் கொண்டவர் முனிவர். ஒன்றும் அறியா க்ஷத்ரியனைக் காத்தருளும் என்று கூறும் சக்ரவர்த்தியைச் சிறிதும் தயையின்றி இடது காலால் தலையில் உதைத்தார். நான் பொறுமைசாலி அல்ல. கோபம் நிறைந்தவன். ஶாபமளிக்காமல் எனது கோபம் நீங்காது என்று கூறி மீனுகவும், ஆமையாகவும், பன்றியாகவும், விகாரமான உருவுள்ள வாமனனுகவும், விகார முகம் உள்ளவனுகவும், க்ரூரமான செயலுள்ள ப்ராம்மணனுகவும், க்ஞானமில்லாத க்ஷத்ரியனுகவும், ராஜ்யத்திற்கு அர்ஹனில்லா க்ஷத்ரியனுகவும், பாஷண்ட தர்மங்கூறுபவனுகவும், கல்கியாகவும் பத்துப் பிறவி எடுப்பாய் என

ஶாபமளித்தார். பக்தனை அம்பரீஷனது ஹ்ருதயத்தில் வஸிக்கும் பக்தவத்ஸலனை பகவான் பத்து ஶாபத்தையும் தானே ஏற்று பத்து அவதாரம் செய்தார். மேலும் கோபமடங்காமல் ஶாபமளிக்க ஆரம்பித்தார் துர்வாஸர். பக்தனைக் காக்க பகவான் கோடி ஸூர்ய ப்ரகாஶமான தி ஜ்வாலையைக் கக்கும் தனது ஸுதர்ஶன சக்கரத்தை அனுப்பினார். அது உக்ரமான ஜ்வாலையுடன் தன்னிடம் வருவதைக்கண்டு பயந்து ஓடினார் முனிவர். என்னைக் காப்பாற்றுங்கள் என இந்த்ரன், ப்ரும்மா, பரமசிவன் முதலியவர்களைச் சரணமடைந்தார். ஹரிபக்தனை அவமதித்த உன்னைக் காக்க எம்மால் முடியாதென அனைவரும் முனிவரைக் கைவிட்டனர்.

## 26-வது அத்தியாயம்

## விஷ்ணுவின் உபதேசம்

எங்கும் விடாமல் தன்னைத் துரத்திவரும் சக்கரத்தின் ஜ்வாலையை ஸஹிக்க முடியாமல் துர்வாஸர் வைகுண்டம் சென்றார். பாகவதனுக்கு ஶாபமளித்து அபசாரம் செய்த என்னை நீர்தான் காக்கவேண்டும். பலகோடி முனிவரில் என்னைப்போல் பாபம் செய்தவன் எவருமில்லையென்று என்னை சிக்ஷிக்க வருகிறது உக்ரமான சக்கரம். மஹா பக்தனை அம்பரீஷனுக்கு யானளித்த ஶாபத்திற்கேற்ற ஶிக்ஷை தந்துவிட்டது. பிராம்மணரது பாதத்தை மார்பில் வஹிக்கிறீர் நீர். உம்மை மனதில் வஹிக்கிறான ராஜா. அந்தப் பக்தனுக்களித்த ஶாபம் தங்களுக்கே தந்தது போலாகும். என்னை மன்னித்துக் காப்பாற்றுங்கள் என ஸாஷ்டாங்கமாக பூமியில் விழுந்து கதறினார் முனிவர்.

பகவான், மஹர்ஷே! பிராம்மணர்களே எனக்குப் பலம். பிராம்மண அநுக்ரஹத்தால்தான் உலக பரிபாலனம் செய்கிறேன். தாங்கள் ஸாக்ஷாத் பரமசிவனின் அம்ஶமல்லவா? மூவுலகிலும் உம்மைக் கண்டு அஞ்சாத

வரில்லை. பிராம்மணர்களுக்கு யான் சிறிதும் அபசாரம் செய்யமாட்டேன். கோ, பிராம்மணர் முதலியவர்களைக் காக்க அடிக்கடி யான் பூமியில் அவதாரம் செய்கிறேன். மிக நிந்திக்கத் தக்க கார்யம் செய்தீர் நீர். அம்பரீஷன் மனதாலோ வாக்காலோ உடலாலோ ஒருவருக்கும் எந்த வகையான தீங்கும் சிறிதும் செய்யமாட்டான். சத்ருவுக்கும் தீங்கு செய்யாத மன்னன் அசைபொருள், அசையாப் பொருள் முதலியவைகளிடமும் என்னை எப்போதும் பார்த்தவண்ணமிருக்கிறான். ஒழுங்காக ஸ்வதர்மத்தைச் செய்யும் பக்தனைக் காரணமின்றி மிரட்டிச் சாபமுமளித்தீர். அவர் ஆதித்யத்தை ஏற்றுக்கொண்டு சரியான ஸமயத்தில் பாரணை செய்ய வராமலிருந்துவிட்டீர். தாஹமடங்க அருந்துவதும், நீர் அருந்தியதும் உம்மை அவமதித்ததாகுமா? அது சாஸ்த்ரத்தைத் தழுவி த்வாதசி பாரணை செய்தது போலுமாகும். பலமுறை அவன் மன்னிக்கும்படி வேண்டியும் நீர் மன்னிக்காததால் என்னைச் சரணமடைந்தான். நீர் சாபம் அளிக்கும்போது நான் அரசனது உடலிலிருந்து அதை ஏற்றுக்கொண்டேன். அவன் தங்களுக்குச் செய்ததாகக் கருதிய பாபத்திற்கு ப்ராயச்சித்தமாகத் தன்னை மறந்து என்னை த்யானம் செய்தான்.

அவனுக்கு அளித்த சாபம் காது வழியாகச் சென்று அவன் ஹ்ருதயத்திலுள்ள என்னிடம் வந்தது. பக்த வத்ஸலனான நானே அதை ஏற்றுக் கொண்டேன். பிராம்மணனது சாபம் வீணாகக் கூடாது. பக்தனும் சாபத்திற்கு ஆளாகக் கூடாது என்று அதை ஏற்றேன். ஸர்வ பூதங்களுக்கும் நன்மை புரியும் பக்தனுக்குண்டாகும் ஆபத்தை அகற்றுவது என் கடமை. வேதத்தில் தேச காலங்களை யொட்டி ஸாமான்யமாக ஸகல மனிதர்களுக்கும், ஆண்களுக்கும், பெண்களுக்கும், நான்கு வர்ணத்தாருக்கும் பொதுவாகவும், விசேஷமாகவும் சில தர்மங்கள் கூறப்பட்டிருக்கின்றன அதில் எல்லோருக்கும் ஒவ்வொரு மாதத்திலும்

வரும் இரண்டு ஏகாதசி, த்வாதசி விருதங்கள் முக்யமானவை. அதை விடுவது மகா தோஷமாகும். த்வாதசி பாரணை முக்யமானதென தர்மத்தை அனுசரித்து பக்தன் ஜல பாரணை செய்தான். அதற்காகக் கோபித்து நீர் ஶாபம் கொடுத்தீர். அதை யான் ஏற்று உமது வாக்கு ஸபலமாகச் செய்தேன். மறுபடியும் நீர் ஶாபங் கொடுக்க ஆரம்பித்த போதுதான் சக்கரத்தையனுப்பினேன். நீர் நேரில் அரசனிடம் சென்று சமாதானப் படுத்தும். கவலைப்படாதீர். அப்போதுதான உமக்கு சக்கர பயம் அகலும். நான் இந்த கல்பத்திலும் மத்ஸ்யம் கூர்மம் வராஹம் நரஸிம்மம் வாமநம் பரஶுராமர் கிருஷ்ணர் புத்தர் கல்கி என்ற அவதாரங்களைச் செய்யப்போகிறேன். இவை பாபிகளது பாபங்களை அகற்றும்.

27-வது அத்தியாயம்

## அம்பரீஷனது வருத்தம்

அம்பரீஷனுக்கு ஶாபம் கொடுத்ததால் எனது அவதாரத்திற்கு ஸஹாயம் செய்தீர். பிராம்மண வாக்கை ஸத்யமாகச் செய்யாவிடில் உலக மரியாதை அகன்று விடும். தாமதிக்காமல் சீக்கிரமாக பிராயோபவேஶம் செய்ததுபோல், உபவாஸமிருக்கும் அம்பரீஷனை வேண்டிக் கொள்ளும். தன்னைத்தான் நிந்தித்துக் கொண்டு தன்னை லல்லவா சக்கரம் ரிஷியைத் துரத்துகிறது. பசுவிற்காகவும் பிராம்மணருக்காகவும் பிராணனை விடவும் தயாராக இருக்கவேண்டுமே! அரசனுக்கு ரக்ஷிப்பதல்லவா முக்ய தர்மம்! துஷ்டர்களை சிக்ஷிப்பது தர்மமாயினும் வேதியரை சிக்ஷிக்கலாகாது. சாஸ்த்ரம் உணர்ந்து காம க்ரோதிகளில்லாத வேதியரைக் கொண்டு குற்றத்தைக் கண்டு அவரை த்யாநம் செய்ய வேண்டுமே அல்லாது, மற்றவரைப்போல் தண்டிக்கக்கூடாது. தன்னைக் கொல்ல ஆயுதமேந்திவரும் வேதியனைக்கூட கொல்லாமல் விடும்

க்ஷத்ரியனே நற்கீர்த்தி நற்கதி பெறுவான். பிராம்மண வதத்தைவிடக் கடுமையான பாபமில்லை. தானே கொன்றாலும் பிறரை கொண்டு கொன்றாலும் பிரும்மஹத்தி பாபம் சூழ்ந்துக்கொள்ளும். வேதியனை இழுத்தாலும் அடித்தாலும் அவர் பொருளை அபஹரித்தாலும் ஊரை விட்டு விரட்டினாலும் அது ப்ரும்மஹத்திக்கு ஸமமான பாதகமல்லவா?

எனக்காக அல்லவா சக்கரம் துர்வாஸரைத் துரத்துகிறது? நான் பிரும்மஹத்தி பாபம் செய்தவன்! இது போன்ற சொற்களைக் கூறி அம்பரீஷன் பிராம்மணர்களுடன் கூடி வருந்திக்கொண்டிருக்கிறான். மஹர்ஷே! விரைவாக நீர் அங்கு செல்லும்; உமக்கும் அம்பரீஷனுக்கும் க்ஷேமமுண்டாகும் என்று பகவான் கூற, முனிவர் அவரை நமஸ்கரித்து திரும்பித் திரும்பி சக்கரத்தைப் பார்த்துக் கொண்டு அரசனிடம் வந்தார். இவரைக் கண்டவுடன் அரசன் எழுந்து அவரை ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து மஹர்ஷே! என்னை மன்னித்துவிடுங்கள். ஓ சக்கரமே! நீரும் என்னை க்ஷமியும். முனிவரை ஹிம்ஸிக்காதீர்! காப்பாற்றும்! என்னையும் மஹரிஷியையும் காத்தருளும்! என்று கூறி இரு கரங்களாலும் அவரைத் தழுவி தனக்குப் பின்பக்கம் அவரை நிறுத்தி வில்லை வளைத்து அம்புடன் சக்கரத்தை எதிர்த்து நின்று கூறினான்.

## 28-வது அத்தியாயம்

## ஸுதர்ஶந அம்பரீஷ ஸம்வாதம்

ஓ, ஸுதர்ஶந! நமஸ்காரம். பிராம்மணனை ரக்ஷி. ஹிம்ஸிக்காதே! நான் உயிருடன் உள்ளவரை இவரை நீ வதம்செய்ய இடந்தர மாட்டேன், ஆதலால் துர்வாஸரை விடு! அல்லது என்னுடன் போர் செய்! எங்கும் தங்கு தடங்கலில்லாத பகவானது ஆயுதம் நீ! எனக்குத் தெய்வமாவாய்! ஆயினும் க்ஷத்ரியன் ஒருவரையும்

யாசிக்கக் கூடாது அல்லவா? யுத்தம் செய்து நான் அவரைக் காக்கவேண்டும். உனக்கு உயிரில் ஆசை இருந்தால் இவரை விடு. பலமிருந்தால் யுத்தம் செய்து எனது பாஹுபலத்தைப் பார்! விஷ்ணு முதலிய ஸகல தேவரும் நமது போரை என் பாஹுபலத்தைப்—பார்க்கட்டும் என்றான் அம்பரீஷன்.

ஓ, ராஜன்! தநு, கைடபன் முதலியவர் தேவராலும் அஸுரராலும் ஜயிக்க முடியாதவர்; அவர்களை நான் கொல்றேன்! இந்த துர்வாஸரது கோபம் என்னிடம் பலிக்காது. சிவனது தேஜஸும் பிரும்மவர்ச்சஸ்ஸும் நிறைந்த இவரை அசைக்க எவராலும் முடியாது! அத்தகையவரைத் தோல்வியுறச் செய்யும் என்னைக் கேவல க்ஷத்ரிய ஶக்தியைக்கொண்டு எதிர்க்க விரும்புகிறாய். ஸாமர்த்திய முள்ள க்ஷத்ரியன் தன்னிலும் பலவானுடன் ஸந்தி செய்து கொள்வதுதான் உசிதம். மூர்க்கத்தனத்துடன் என்னை எதிர்க்கும் உன்னை ஹரி பக்தன் என்பதால் கொல்லாமல் விட்டேன். தைரியமிருந்தால் போர்புரிந்து பிராணனை விடு என்ற ஸுதர்ஶநத்தின் சொல்லைக் கேட்ட அரசன் கோபங்கொண்டு, ஓ ஸுதர்ஶந! பகவானது ஆயுதம் நீ என்பதால் உன்னை யான் கொல்லவில்லை! கூரிய ஶரங்களால் உன்னைப் பிளந்தெறிகிறேன் பார்! இன்றோடு உனக்கிருந்த கௌரவம் அழியப்போகிறது! உனது தேவாம்ஶத்தை விட்டு கேவல க்ஷத்ரியாம்ஶத்துடன் நில்! நான் எனது ஶரத்தைத் தேவர், பிராம்மணர், ஸ்த்ரீ, பசு முதலியவர்களிடம் பிரயோகிக்கமாட்டேன்! என்று கூறி, மிகக் கூரிய இருபத்து நான்கு ஶரங்களைச் சக்கரத்தின் பாதங்களில் ஏவினான். அந்தப் பிரயோகத்தையும் அரசனது வீர்யத்தையுங் கண்டு ஸந்தோஷமடைந்த ஸுதர்ஶநம் கூறிற்று:

ஓ, அம்பரீஷ! உன்னைக் காக்கவே பகவான் என்னை ஏவினார். உன்னை ஶரணமடைந்த அவரை யான் கொல்

லாமல் விட்டுவிட்டேன் என்று கூறி, வில்லையும் அம்பையும் எறிந்துவிட்டு, ஹரிபக்தனான மன்னனைப் பணிந்து நின்றது சக்கரம். அரசனும் வில்லம்புகளை விட்டுவிட்டு விநயத்துடன், ஓ சக்கர! ஸம்ஸாரத்தில் சுழலும் ஒரு புழு போன்ற நானெங்கே? தேஜோமயமாய்ப் பகவானது கரத்திலுள்ள நீர் எங்கே? இதை அறிந்தும் க்ஷத்ரிய தர்மத்தை முன்னிட்டுப் போர்புரிய வந்த என்னை மன்னிக்க வேண்டும். உன் கரத்தால் இறப்பது சிலாக்கியமென யுத்தத்திற்கு வந்த என்னை ரக்ஷியும். ஒருவராலும் ஸஹிக்க முடியாத ஜ்வாலையைக் கக்கும் உமது உடல் கோடி ஸூர்ய பிம்பம்போல் இருக்கிறது. உம்மை எதிர்க்கும் எல்லோரையும் அழிக்கவல்ல உம்மை எதிர்த்த அபசாரத்தை க்ஷமிக்கவேண்டும்.

நமோஸ்துதே ஜன்ம விநாசகாய தத்தைவ பக்தஸ்ய ச
ரக்ஷணாய!
விஷ்ணோரநந்தத்யுதி தீப்திதாயப்ராணப்ரயாணார்த்தி
ஹராயதேத்ய

என்று அரசன் துதிக்க, சக்கரம் உனக்கு க்ஷேமமுண்டாகட்டுமென்று கூறி மறைந்தது. இதைப் படித்தாலும் கேட்டாலும் சத்ரு பயமன்று எல்லோரும் ஸுகத்தைப் பெறுவர்.

## 29-வது அத்தியாயம்

## முனிவர் பாரணை

அம்பரீஷன், துர்வாஸ முனிவரைப் பணிந்து, பக்தியுடன் பிரார்த்தித்தார். மஹர்ஷே! யான் பாபி! பாபச் சேற்றிலிருந்து என்னைக் கரையேற்றும்! கிருபையுள்ள தாங்கள் என்னைக் காப்பாற்றினீர்கள். மறுபடியும் என் வீட்டிற்கு வந்தீர்களே! அது எனது பாக்யம். பாரணை செய்யுங்கள்! உமக்கேது பயம்? ஸர்வ லோகமும் உம்மைக் கண்டுதான் அஞ்சுகிறது. பயம் என்ற வியா

ஐத்தால் என்னை அருள்புரியவே வந்தீர்கள். எனக்குப் பிராணனை அளித்தீர்கள்! என்று கூறும் அம்பரீஷனைக் கட்டி அணைத்து, ராஜன்! நீதான் என் பிராணனைத் தந்த பிதா! நியாயமாக நான்தான் உன்னைப் பணியவேண்டும். நீ அதை ஏற்கமாட்டாய்! நான் பல பிராம்மணர்களை மனம் நோகச் செய்தேன். அதற்கேற்ற பலனை இப்போது அனுபவித்தேன். பிராம்மணரிடம் அன்பும் ஆதரவுங் கொண்ட உனது வீட்டில் உனேடு உட்கார்ந்து உண்கிறேன் என்று ஸந்தோஷமாகப் புஜித்தார். ஸாக்ஷாத் ஶிவாம்ஶமான துர்வாஸர் சிறந்த விஷ்ணு பக்தனை அம்பரீஷனது பக்தியைப் பரீக்ஷிக்கவே வந்தார். அவனது பக்தியை மெச்சி விடைபெற்றுத் தன் இருப்பிடம் சென்ருர்.

கார்த்திகை மாத ப்ரபோதிநீ த்வாதசி எல்லோருக்கும் எல்லாவகையான பலனையுந் தரும் பலதா எனப்படும். ஏகாதசியில் உபவாஸமிருந்து, இரவு கண் விழித்துத் துவாதசியில் பக்தியுடன் பாரணை செய்தால் பிராயச்சித்தமே கூறப்படாத மஹா கொடிய பாபத்திலிருந்தும் விடுபடுவான். த்வாதசி ஸ்வல்பமிருந்தால் அதே பகவானுக்குப் பிரியமானது. அதிக பலத்தைத் தரத்தக்கது. ஆதலால் ப்ரபோதிநீ த்வாதசி மிக முக்கியமானதாகும்.

## 30-வது அத்தியாயம்

## கார்த்திகை புராண மஹிமை

கதை கூறும் ஸூதரைக் கொண்டாடி மஹரிஷிகள் கேட்டனர். ஓ உத்தம ஸூத புராணிகரே! கலியால் பெரும்பாலும் எல்லோரது மனமும் கலங்கி பாபமுள்ளதாகயிருக்கும், ஸம்ஸாரத்தில் முழுகிக்கிடக்கும் மனிதரைக் கரையேற்றத்தக்க ஸுலபமான உத்தம தர்மமெது? உத்தம தேவர் யார்? எதனுல் மோக்ஷமகலும்? யம பாஶத்திலிருந்து விடுபட யாது மார்க்கம் என்று வினவ, ஸூதர்

கூறினார்:- தபோதனர்களே! லோகோபகாரமாக இந்தக் கேள்வி கேட்டீர்கள்! இதே ஸகல யாக பலனையும் தீர்த்த யாத்ரா பலனையும் தரத்தக்கது. ஸர்வ சாஸ்திரங்களிலும் மிக ஸாரதமமான விஷயத்தைச் சொல்கிறேன், கேளுங்கள்.

1. மஹாவிஷ்ணுவின் சரிதத்தைக் கேட்டது.
2. கார்த்திகை மாதத்தில் ஸ்நாநம், தீபதாநம், விஷ்ணு பூஜை முதலியன செய்வது.
3. கார்த்திகை முப்பது நாளும் காவேரி அல்லது புண்ய தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்வது.
4. நித்யம் தீபதாநம், வெண்கல பாத்ர தாநம், தான்யம், ஏதேனும் ஒரு பழம், சக்தியுள்ளவர் கிருஹ தாநம் செய்தல்.
5. சக்தி இல்லாதவர் கார்த்திகை முப்பது நாளும் ப்ராத ஸ்நாநம் செய்து கார்த்திகை புராணம் கேட்டால் போதும்.
6. நித்தியம் ஒரு தேங்காயாவது, பழமாவது தந்தால் மிக விஶேஷம்.

இதில் ஒவ்வொன்றுமே கலிதோஷத்தைப் போக்கும்.

கார்த்திகை விரதம் உத்தம தர்மம். மஹாவிஷ்ணு சிறந்த தேவரென்றார் ஸமத புராணிகர். எல்லோரும் அவரை அர்ச்சித்து கௌரவித்து விடைபெற்றனர்.

கார்த்திகை புராணத்தைப் படித்தாலும் கேட்டாலும் ஸர்வ பாபங்களும் பீடைகளும் நோய்களும் ஏழ்மையும் அகலும். விஷ்ணுவின் கருணையால் ஸந்ததி ஸம்பத், ஆரோக்கியம், பெண்களுக்கு தீர்க்க ஸௌமங்கல்யம் கிடைக்கும்.

கார்த்திகை புராணம் முற்றிற்று.

# எமது வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | ஸதாசாரம் | 5 - 00 |
| 2. | நாற்பது ஸம்ஸ்காரங்கள் | 9 - 00 |
| 3. | துர்க்கா ஸப்தஸ்லோகியும் ஸ்ரீ லக்ஷ்மி அஷ்டோத்தரமும் | 2 - 00 |
| 4. | ஆதித்ய ஹ்ருதயமும் கநகதாரா ஸ்தவமும் | 1 - 00 |
| 5. | துளசி சரிதமும் பூஜையும் | 2 - 00 |
| 6. | ஏகாதசி மகாத்மியம் (25 ஏகாதசிகள்) | 2 - 00 |
| 7. | ஸூதக ஆசௌச விளக்கம் | 1 - 25 |
| 8. | இந்த்ராக்ஷீஸ்தோத்ரம் சிவகவசம் | 1 - 00 |
| 9. | ஆதிசங்கரர் அருளிய குர்வஷ்டகம் தோடகாஷ்டகம் | 1 - 00 |
| 10. | ஸர்வஜன ஸர்வதேவதா பூஜைமுறை பாராயண ச்லோகங்கள் | 2 - 50 |
| 11. | ஹிந்து மதப்பிரமாண நூல் | 1 - 50 |
| 12. | விநாயகர் அகவல், கந்தர் சஷ்டி | 1 - 50 |
| 13. | ஸ்ரீ பாதுகா பஞ்சரத்நஸ்தவ: | 4 - 00 |
| 14 | கல்கி புராணம் | 9 - 00 |
| 15 | மார்கண்டேய புராணம் | 8 - 00 |
| 16 | கார்த்திகை மஹாத்மியம் | 4 - 00 |
| 17 | ஸந்தியா வந்தனம்—விளக்கத்துடன் | 2 - 00 |
| 18 | The Holy Advent | 9 - 00 |


## பவானி புக் சென்டர்

19, ஸ்டேஷன் ரோடு,

மேற்கு மாம்பலம், சென்னை-600 033.